தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 22.12.2012 A.M

### கம்பு குவின்டாலுக்கு ரூ.1,200 விலை நிர்ணயம்

விழுப்புரம் மாவட்டத்தில் கம்பு அறுவடை மாதங்களான 2013 மார்ச், ஏப்ரலில், 1 குவின்டாலுக்கு ரூ. 1,100 முதல் ரூ.1,200 வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக விழுப்புரம் வேளாண் வணிக துணை இயக்குநர் மா. சண்முகம் தெரிவித்துள்ளார்.

÷அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

÷இந்தியாவில் பயிரிடப்படும் தானியப் பயிர்களில் கம்பு முக்கியமான பயிராக உள்ளது. கம்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவில் பயிரிடப்படுகிறது. இப்பயிர் மிகவும் வறட்சியான நிலைகளிலும் வளரக் கூடியது.

÷தற்போது கோழித் தீவனமாகவும், கால்நடைகளுக்கு பச்சைத் தீவனமாகவும் பயன்படுகிறது. இந்தியாவில் 2011-12-ஆம் ஆண்டில் கம்பு 8.39 மில்லியன் டன் உற்பத்தியானது. 1 ஹெக்டேருக்கு 1091 கிலோ உற்பத்தியாகும். அக்டோபர், டிசம்பர் மாதங்களில் அதிகளவு பயிரிடப்படுகிறது.

÷கோடைக் காலத்தில் தமிழ்நாடு, கர்நாடகம், பஞ்சாப், குஜராத் ஆகிய மாநிலங்களில் இறவைப் பயிராகப் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் 0.54 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டு, 2009-2010ல் 0.82 டன் உற்பத்தி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் தூத்துக்குடி, விழுப்புரம், மதுரை, தேனி, விருதுநகர், கடலூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கம்பு அதிக அளவில் பயிரிடப்படுகிறது. வர்த்தக தகவல்களின்படி இந்த ஆண்டு கம்பு சாகுபடி பரப்பு குறைய வாய்ப்புள்ளது.

÷தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தில் உள்நாட்டு மற்றும்

ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் இதற்காக 10 ஆண்டுகளாக கோவில்பட்டி சந்தையில் நிலவிய கம்பின் விலைகளை ஆய்வு செய்தது.

ஆய்வு முடிவுகளின் படி கார்த்திகை பட்டத்தில் கம்பு பயிரிடும் விவசாயிகளுக்கு அறுவடை மாதங்களான மார்ச், ஏப்ரல் 2013-ல் ஒரு குவின்டாலுக்கு ரூ.1,100 முதல் ரூ.1,200 வரை விலை கிடைக்கும் என தெரிவிக்கிறது.

÷இதன் அடிப்படையில் விவசாயிகள் கம்பு பயிர் சாகுபடி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் எனச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 75 லட்சத்தில் எரிவாயு தகன மேடை , ஆட்டு இறைச்சிக்கூடம்

திருத்தணி நகரில் ரூ.75 லட்சம் செலவில் எரிவாயு தகன மேடை மற்றும் நவீன ஆட்டு இறைச்சிக் கூடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

÷திருத்தணி நகராட்சி சார்பில், அரக்கோணம் சாலையில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் பின்புறம் அரசு நிலம் உள்ளது. இதில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடை அமைக்கவும், அனுமந்தபுரம் பகுதியில், ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் நவீன ஆட்டு இறைச்சிக் கூடம் அமைக்கவும் நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

÷இந்நிலையில் அதற்கான அடிக்கல் நாட்டு விழா, நகராட்சி ஆணையர் பாலசுப்ரமணியம் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

÷துணைத் தலைவர் மாசிலாமணி, மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் கோ.ஆறுமுகம், நகர்மன்ற உறுப்பினர் கேபிள் எம்.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

÷துப்புரவு ஆய்வாளர் லட்சுமி கணேசன் வரவேற்றார்.

÷சிறப்பு அழைப்பாளராக திருத்தணி நகராட்சித் தலைவர் டி.சௌந்தர்ராஜன் இரு திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார். இப்பணிகள் 6 மாதத்துக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

÷அதைத் தொடர்ந்து நகராட்சி அலுவலக வளாகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

÷இதில் நகராட்சியில் 21-வது வார்டில் உள்ள பழங்குடி இன மகளிருக்கு சுயதொழில் தொடங்க ஏழை பெண்கள் 4 பேருக்கு தையல் இயந்திரம், ஏழு பேருக்கு செங்கல் அறுக்கும் இயந்திரம், 31 பேருக்கு எம்ப்ராய்டரி தையல் இயந்திரம் ஆகியவை ரூ.9 லட்சம் மானியத்துடன் கூடிய கடனுதவி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

÷நிகழ்ச்சியில், நகர்மன்ற உறுப்பினர்கள் சுமதி புஷ்பராஜ், செல்வகுமார், ரகுநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளை காக்க அனைத்து பயிர்களுக்கும் காப்பீட்டு வசதி : ஆட்சியர்**

விவசாயிகளை நஷ்டத்தில் இருந்து காக்க அனைத்து வகையான பயிர்களுக்கும் காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் ஆட்சியர் கூறியதாவது:

பருவ மழை சரியாக பெய்யாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களுக்கு உதவ மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாயிகள் நஷ்டத்தில் இருந்த தப்பிக்க அனைத்து பயிர்களுக்கும் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாழைக்கு ஏக்கருக்கு ரூ.3228, வெங்காயத்துக்கு ரூ.2320, உருளைக்கு ரூ.3032, குச்சிகிழங்கிற்கு ரூ.1705 என அனைத்து பயிர்களுக்கும் விவசாயிகள் காப்பீடு செய்து பயன் பெறலாம்.

தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டம், வானிலை பயிர் பாதுகாப்பு திட்டம்

போன்ற திட்டங்கள் மூலம் பயிர்களை காப்பீடு செய்யலாம்.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் செடிகள், விதைகள் வாங்க 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.1.7 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் வெங்கடாசலம்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி மனோகரன், வேளாண்மை

இணை இயக்குநர் சம்பத்குமார், தோட்டக்கலை துணை இயக்குநர் சந்திரசேகரன், விவசாயிகள் சங்கத் தலைவர் பெருமாள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## கொடைக்கானலில் முட்டைக்கோஸ் விளைச்சல் அதிகம்

கொடைக்கானலில் முட்டைக்கோஸ் விளைச்சல் அதிகரித்துள்ளதால், விலை குறைந்து போனதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் செண்பகனூர், வில்பட்டி, அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, உகார்த்தே நகர், பள்ளங்கி, கோம்பை, மன்னவனூர், கிளாவரை, பூண்டி போன்ற கிராமப் பகுதிகளில், தற்போது பீன்ஸ், பட்டாணி, முட்டைக்கோஸ், முள்ளங்கி போன்ற காய்கறிகள் விளைவிக்கப்பட்டு வருகின்றன.

குறைந்த அளவு தண்ணீரே போதுமானது என்பதால், இம்முறை முட்டைக்கோஸ் அதிக விளைச்சல் கண்டுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தாலும், விலை குறைந்துள்ளதால் கவலையடைந்துள்ளனர். இங்கு விளையும் முட்டைக்கோஸ் மதுரை, திருச்சி, தேனி, திண்டுக்கல், கேரளம் போன்ற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

இது குறித்து, செண்பகனூர் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறியது:

கொடைக்கானல் உள்பட பல்வேறு கிராமங்களில் முட்டைக்கோள் அதிக அளவில் பயிரிடப்பட்டிருந்தது. இதற்கு, குறைந்த அளவு தண்ணீரே போதுமானது என்பதால், தற்போது நிலவும் தண்ணீர் பற்றாக்குறையான காலத்திலும் அதிக அளவில் விளைச்சல் கண்டுள்ளது. இங்கு விளையும் முட்டைக்கோஸ் பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. 10 கிலோ ரூ. 100 முதல் ரூ. 150 வரை விற்பனையாகும்.

ஆனால், இந்தாண்டு வெளி மார்க்கெட்டில் ஊட்டி, பெங்களூரு போன்ற இடங்களிலிருந்து அதிக அளவில் முட்டைக்கோஸ் விற்பனைக்கு வந்துள்ளதால், கொடைக்கானலில் இருந்து அனுப்பப்படும் முட்டைக்கோஸ் விலை இல்லாமல் இருந்து வருகிறது.

10 கிலோ ரூ. 70 முதல் ரூ. 90 வரையே விற்பனையாகிறது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## கரும்பு , மிளகாய் , வாழை க்கு பயிர் காப்பீடு தேதி நீட்டிப்பு

கரும்பு, மிளகாய், வாழை பயிரிட்டுள்ள விவசாயிகள் பயனடையும் வகையில் பயிர் காப்பீடு செய்வதற்கான காலம், வரும் ஜனவரி 31 ஆம் தேதி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது.

இதில், விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதில் அளித்து ஆட்சியர் பேசியது:

சிவகங்கை மாவட்டத்தில் மழை குறைவாக பெய்துள்ளதன் காரணமாக, விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயக் கூலிகள் வேறு பணிக்கு செல்வதைத் தவிர்க்கும் வகையில் அரசு புதுவாழ்வுத் திட்டம், மகளிர் திட்டம், ஊரக வளர்ச்சி முகமை மூலம், பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதேபோல, 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில், பொதுமக்கள் அதிகளவில் பங்குகொள்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே விவசாயிகள், பொதுமக்கள் அரசுத் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாவட்டத்தில் உழவர் பாதுகாப்பு அட்டை வழங்குவதற்கான பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நெல் சாகுபடிக்குப் பின், பயறு வகைகளை அதிகளவில் பயிர் செய்திட வேண்டும்.

கரும்பு, மிளகாய், வாழை பயிர்களுக்கு காப்பீடு செய்வதற்கான காலம், வரும் ஜனவரி மாதம் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திருப்புவனம் பகுதி விவசாயிகள் பயனடையும் வகையில், பொதுப் பணித் துறையின் மூலம், வைகை ஆற்றில் தண்ணீர் திறந்து விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மின்மாற்றிகளில் பழுது ஏற்பட்டால், அதை உடனடியாக சரி செய்ய மின்சாரத் துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சோ. தனபால், வேளாண் இணை இயக்குநர் செல்லதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கருகிய பயிருக்கு நஷ்டஈடு கோரி ஆட்சியர் முற்றுகை : விவசாயிகள் திடீர் போராட்டம்

கருகியதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கவும், தற்கொலை செய்து கொண்ட விவசாயிக்கு நிவாரணம் உதவி வழங்கவும் வலியுறுத்தி விவசாயிகள் சங்கத்தினர் மாவட்ட ஆட்சியரை வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டனர்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா முன்னிலை வகித்தார். கூட்டத்தில்

பேசிய விவசாய சங்க நிர்வாகிகள் மாவட்டத்தில் போதிய மழையில்லாததால் பயிர்கள் கருகி வருகின்றன. இதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வீதம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றனர்.

மேலும் விருதுநகர் அருகே புதுக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பாண்டி பயிர் கடனை அடைக்கமுடியாமல் அண்மையில் விஷம் குடித்து உயிரிழந்தார். அவரது குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும். மேலும், குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என ஆட்சியரிடம் விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் கோரிக்கையை பரிசீலித்து அரசுக்கு அனுப்புவதாக தெரிவித்தார். அதற்கு, விவசாயிகள் ஆட்சியர் பரிந்துரை செய்வதற்கு உறுதி கூற வேண்டும் என கூறி மாவட்ட ஆட்சியரை மாவட்ட விவசாயிகள் சங்கத்தின் செயலாளர் விஜயமுருகன், செயலாளர் ராமசுப்பிரமணியராஜா உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் முற்றுகையிட்டனர்.

பின்னர் போதிய மழையில்லாமலும், மின்தடை

போன்ற காரணங்களால் கருகிய நிலையிலுள்ள நெல் பயிர் மற்றும் கரும்பு உள்ளிட்ட பயிர்களை கொண்டு வந்து ஆட்சியரிடம் காட்டினார்கள். அதையடுத்து பரிந்துரை செய்வதாக ஆட்சியர் உறுதி கூறியதை அடுத்து கலைந்து சென்றனர்.

## விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என, வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ்.தாமோதரன் கூறினார்.

உழவர் உழைப்பாளர் கட்சியின் நிறுவனர் நாராயணசாமி நாயுடுவின் 28-வது நினைவு தினம் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. கோவை மாநகர மேயர் செ.ம.வேலுச்சாமி தலைமை வகித்தார். அதிமுக விவசாயப் பிரிவின் செயலாளர் கு.தங்கமுத்து, கவுண்டம்பாளையம் எம்.எல்.ஏ. வி.சி.ஆறுக்குட்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேட்டவலம் மணிகண்டன் வரவேற்றார்.

இதில் கலந்துகொண்டு வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ்.தாமோதரன் நாராயணசாமி நாயுடுவின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவர் பேசியது:

மறைந்த நாராயணசாமி நாயுடு விவசாயிகளுக்கு என்னென்ன திட்டங்களை செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ, அதையெல்லாம் தற்போது தமிழக முதல்வர் செயல்படுத்தி வருகிறார். விவசாயிகளின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதில் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. நடப்பாண்டில் 105 லட்சம் டன் உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்து இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தை பெற்றுள்ளது. இதற்கான மத்திய அரசின் விருதும் விரைவில் கிடைக்க உள்ளது என்றார்.

அமைப்புச் செயலாளர் ஏ.கே.செல்வராஜ், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ்.பி.வேலுமணி, தா.மலரவன், ஓ.கே.சின்னராஜ், முன்னாள் எம்.எல்.ஏ கே.பி.ராஜு,கோவை மாநகர துணை மேயர் லீலாவதி உண்ணி உள்பட பலர் கலந்துகொண்டனர். நாராயணசாமி நாயுடு நினைவிடத்தில் மணிமண்டபம் கட்டப்படுவதோடு, அவர் வாழ்ந்த வீட்டை நினைவுச் சின்னமாகவும் அறிவித்து அரசே பராமரிக்க வேண்டுமென விவசாயிகள் சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

## வறண்டு வரும் மேட்டூர் அணை :

மேட்டூர் அணையின் நீர் இருப்பு 9.16 டிஎம்சியாகக் குறைந்ததால், அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு தொடர்ந்து தண்ணீர் திறக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. மேலும், இந்த அணை நீரை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் பெறும் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் குடிநீர் விநியோகம் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது.

மேட்டூர் அணையின் உள்பகுதியில் அமைந்துள்ள நீரேற்று நிலையத்தின் மூலம் நாள்தோறும் 2 கோடி லிட்டர் குடிநீர் எடுக்கப்படுகிறது. இதில், நங்கவள்ளி, ஜலகண்டாபுரம், தாரமங்கலம் ஆகிய பகுதிகளுக்கு 40 லட்சம் லிட்டரும், சேலம் மாநகராட்சிக்கு 1.60 கோடி லிட்டரும் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும், காவிரிக் கரையில் அமைந்துள்ள நீரேற்று நிலையத்தின் மூலம் நாள்தோறும் 8.03 கோடி லிட்டர் குடிநீர் எடுக்கப்படுகிறது. இதில், சேலம் மாநகராட்சிக்கு மட்டும் 6 கோடி லிட்டரும், ஆத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள 9 பேரூராட்சிகள், கிராமங்களுக்கு 2 கோடி லிட்டரும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

இதன்படி, மேட்டூரில் இருந்து சேலம் மாநகராட்சிக்கு மட்டும் நாள்தோறும் 7.60 கோடி லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதேபோல், மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீரை ஆதாரமாகப் பயன்படுத்தி, ஈரோடு மாநகராட்சிக்கு 6.70 கோடி லிட்டரும், திருச்சி மாநகராட்சிக்கு 8.80 கோடி லிட்டரும் குடிநீர் எடுக்கப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் மட்டும் சுமார் 20 லட்சம் மக்கள் காவிரி நீரை குடிநீர் ஆதாரமாகக் கொண்டுள்ளனர். மேலும், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் காவிரி நீரை ஆதாரமாகப் பயன்படுத்தி குடிநீர் பெறுகின்றனர்.

இந்த நிலையில், மேட்டூர் அணையில் வெள்ளிக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி 9.16 டிஎம்சி தண்ணீர் மட்டுமே இருப்பில் உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இதுவே மிகக் குறைந்த அளவு நீர் இருப்பு. இந்த நிலையிலும், காவிரி டெல்டா பாசனத்துக்காக, வினாடிக்கு 11,658 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

இதனால், அணை, குளம்போலக் காட்சியளிக்கிறது. வழக்கமாக, சேலம் மாவட்டத்தில் கோடைக் காலங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகரித்து வரும் நிலையில், தற்போதைய மேட்டூர் அணையின் நீர் ஆதாரத்தால், மேலும் குடிநீர் தட்டுப்பாடு அதிகரிக்கும் என கூறப்படுகிறது.

குடிநீர்த் தேவையைப் பொறுத்து, அணையில் இருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறக்கப்படும் என்று அண்மையில் பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், அணையில் இப்போதுள்ள 9.16 டிஎம்சி தண்ணீரை பயன்படுத்தி, பாசனம், குடிநீர், மீன் வளர்ப்பு ஆகியவற்றை எப்படிச் சரிசெய்வது என்பது குறித்து அதிகாரிகள் குழப்பத்தில் உள்ளனர்.

## பாசன நீர் குழாய்கள் இலவசமாக பெற விண்ணப்பிக்கலாம்

நாகை மாவட்டத்தில் விலையில்லா பாசன நீர் குழாய்கள் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட வேளாண் இணை இயக்குநர் உ. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நிகழ்ப் பருவ சம்பா நெல் சாகுபடிக்கு நிலவும் அசாதாரண பருவ நிலையைக் கருத்தில் கொண்டு பயிர்களை வறட்சியிலிருந்து காப்பாற்றும் வகையில், தமிழக அரசின் சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளின் நீர் தேவையைப் பூர்த்தி செய்ய 100 சதவீத மானியத்தில் நீரேற்ற கறுப்பு நிற குழாய்களும், வளையக் கூடிய குழாய்களும் வழங்கப்படுகிறது.

பிரதான வாய்க்கால்களிலிருந்து விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் கொண்டுச் செல்லும் போது ஏற்படும் பாசன நீர் இழப்பை தவிர்க்கும் வகையில் 3 அங்குல குறுக்களவு கொண்ட 6 மீட்டர் நீளமுடைய கறுப்பு நிற குழாய்களும், மேடு பள்ளம் கொண்ட இடங்களில் பாசன நீரேற்ற 100 மீட்டர் நீளம் கொண்ட வளையக்கூடிய குழாய்களும் வழங்கப்படுகிறது.

பாசனப் பயன்பாட்டுக்கான இந்தக் குழாய்களை 100 சதவீத மானியத்தில் பெற விரும்பும் விவசாயிகள், தொடர்புடைய பகுதியின் வேளாண் உதவி அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் கணினி சிட்டா, சிறு- குறு விவசாயிகள் என்பதற்கான சான்று, கிராம நிர்வாக அலுவலரின் அடங்கல் சான்று, வயலின் வரைபடம், நீர் பாசன ஆதார விவரம், நீர் இறவை இயந்திரம் உள்ளதற்கான சான்று ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

குத்தகை சாகுபடி விவசாயிகள், 10 ஆண்டுகள் முறையாக பதிவு செய்ததற்கான பத்திரப் பதிவு குத்தகைச் சான்றையும் இணைக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, உரியச் சான்றுகளுடன் இணைத்து, தொடர்புடைய வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். விவசாயிகளின் விண்ணப்பங்கள் வேளாண் பொறியியல் துறைக்குப் பரிந்துரைக்கப்பட்டு, பாசனக் குழாய்கள் வழங்கப்படும் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புதுகை டெல்டா பாசன பரப்பை அரசிதழில் வெளியிட வேண்டும் : விவசாயிகள் வலியுறுத்தல்**

டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள அரசுச் சலுகைகள், புதுக்கோட்டை மாவட்ட டெல்டா பகுதி விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில், டெல்டா பாசன பரப்பளவை அரசிதழில் வெளியிட புதுகை மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியரகத்தில் ஆட்சியர் செ. மனோகரன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் க. நாகராஜன், மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.சி. ராமையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

மு. மாதவன்: புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள டெல்டா பகுதிகளுக்கும் அரசு அறிவித்துள்ள 12 மணி நேர மின்சாரம் வழங்க வேண்டும் என வலியுறுத்தப்படும் நிலையில், அந்தப் பகுதிகள் அரசிதழில் இல்லை என மின்வாரியம் கூறி வருகிறது. எனவே, இந்த மாவட்டத்தில் உள்ள டெல்டா பாசனப் பரப்பை அரசிதழில் வெளியிட மாவட்ட நிர்வாகம் விரைவான நடவடிக்கை எடுத்து, கருகிக் கொண்டிருக்கும் பயிரைக் காப்பாற்ற வேண்டும்.

அறந்தாங்கி செல்லத்துரை: தென்னை வாரியத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்க்க அனைத்து தகுதிகள் இருந்தும், அதை கணக்கெடுத்து அரசுக்கு அறிக்கை அளிப்பதில் தாமதம் நீடிப்பதால், பிற மாவட்டங்களுக்கு கிடைக்கும் சலுகைகளை இந்த மாவட்ட விவசாயிகள் பெற முடியவில்லை. எனவே, புள்ளி விவரங்களை விரைந்து சேகரித்து, அரசுக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

ஜி.எஸ். தனபதி: கடந்த ஆண்டில் பயிர்க் காப்பீடு செய்தவர்களுக்கு இதுவரை நிவாரணம் கிடைக்கவில்லை. இச்சூழலில், கடந்த ஆண்டைவிட நிகழாண்டில் அதிமான விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்துள்ளனர். தென்னை வளர்க்கும் அனைத்து விவசாயிகளுக்கும் அடையாள அட்டை வழங்க வேண்டும்.

துரைமாணிக்கம்: போதிய கிடங்கு வசதி இல்லாததால், அறுவடை நேரத்தில் குறைந்த விலைக்கு நெல்லை விற்க நேரிடுகிறது. எனவே, ஆவுடையார் வட்டம், பேராவூர் பகுதியில் சேமிப்புக் கிடங்கு அமைக்க வேண்டும். ஏரி, கண்மாய்களில் வண்டல் மண் அள்ளுவது தொடர்பாக சரியான வழிகாட்டுதல்கள் இல்லை. சிறு பாசனக் குளங்களை சீரமைக்க பொதுப் பணித் துறையில் தனிப் பிரிவு அமைக்க வேண்டும்.

எஸ்.சி. சோமையா: அன்னவாசல் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் அடகு வைத்த நகைகளை அங்கு வேலை பார்ப்பவர்களே திருடியதால், பாதிக்கப்பட்டவர்களுக்கு நகை கிடைக்காத நிலை நீடிக்கிறது. இதுகுறித்து நடந்த அமைதிப்பேச்சின் போது அளிக்கப்பட்ட காலக்கெடு கடந்துவிட்டது. அது தொடர்பான நடவடிக்கைகள் எந்த நிலையில் உள்ளன?

தனி அலுவலர் கே.வி.எஸ். குமார்: இந்தப் பிரச்னையில் தனி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட குற்றவாளி வெளிநாடு சென்று விட்டார். எனினும், அரசின் சிறப்பு நிதியைப் பெற்று அடுத்த 15 நாள்களுக்குள் பாதிக்கப்பட்டவர்களிடம் நகையை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சி. அப்பாவு பாலாண்டார்: போதிய மழையில்லாததால் மாவட்டம் முழுதும் கடும் வறட்சி நீடிக்கிறது. பயிர்களும், நடவுக்குத் தயாரான நாற்றுகளும் கருகிவிட்டன. மாற்றுப் பயிர்களான சோளம், நிலக்கடலை ஆகியவற்றுக்கு அரசு ஆதாரவிலையை அறிவிக்க வேண்டும்.

எம். செபஸ்தியான்: பருவமழை குறைவு, மின்தடை காரணமாக சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகளுக்கு ஓர் ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்.

அத்தாணிராமசாமி: நெல் பயிர்கள் வறட்சியைத் தாங்கும் வகையில், வேளாண் துறை அறிவித்த பொட்டாஷ் கரைசலை தயாரிக்கத் தேவையான பொட்டாஷ் உரத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், ஏகபெருகளூரில் சுமார் 100 ஏக்கர் சம்பா பயிர் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது.

முருகேசன்: இலுப்பூர் பகுதியில் செம்மறி ஆடுகளுக்கு நோய் தாக்கியுள்ளது. அதற்கான தடுப்பு மருந்தை தனியாரிடம் வாங்க வேண்டிய நிலை உள்ளது. அரசு கால்நடை மருத்துவமனைகளில் போதிய அளவில் இதற்கான மருந்தை இருப்பு வைக்க வேண்டும்.

இதைத்தொடர்ந்து, மாவட்டத்தில் விவசாயப் பணிகளின் நிலை, சாகுபடி பரப்பு, உரம், விதைகள் இருப்பு நிலவரம் மற்றும் வேளாண் திட்டங்கள் குறித்து, இணை இயக்குநர் (பொ) பி. எம்பெருமாள் மற்றும் பிற திட்டங்கள் குறித்து அந்தந்தத் துறை அலுவலர்கள் பேசினர்.

### கல்லணைக் கால்வாய் விவசாயிகளுக்கும் காப்பீட்டுத் தொகை வழங்க வலியுறுத்தல்

கல்லணைக் கால்வாய் விவசாயிகளுக்கும் அரசு காப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என புதுக்கோட்டை மாவட்ட கல்லணைக் கால்வாய் விவசாயிகள் பாசனதாரர் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தக் கூட்டமைப்பின் கூட்டம் அறந்தாங்கி அருகே நாகுடி பொதுப் பணித் துறை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பாசனதாரர் கூட்டமைப்பு தலைவர் ஆ. ராமசாமி தலைமை வகித்தார். அறந்தாங்கி ஒன்றியக் குழு துணைத் தலைவர் பி.எம். பெரியசாமி, விவசாய சங்கச் செயலாளர் அ. கணேசன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், தஞ்சை மாவட்ட டெல்டா விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகையை அரசே வழங்கியது போல, புதுக்கோட்டை கல்லணைக் கால்வாய் விவசாயிகளுக்கும், காப்பீட்டுத் தொகையை அரசே ஏற்றுக்கொண்டு, கட்டிய தொகையை திரும்ப வழங்க வேண்டும்.

டெல்டா விவசாயிகள் அனைவருக்கும் ஒரே மாதிரியான சலுகை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

### "ரூ. 51.98 கோடி வட்டியில்லா பயிர்க் கடன்

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ. 51.98 கோடி வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட வருவாய் அலுவலர் எம்.ஏ. சுப்பிரமணியன்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்துக்கு தலைமை வகித்த அவர் மேலும் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் 13,178 விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, இதுவரை ரூ. 51.98 கோடி வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. வட்டியில்லா பயிர்க் கடன் வழங்குவதற்காக 4 ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு மனுக்கள் பெறப்பட்டன. மேலும், கூட்டுறவுத் துறை மூலம் மத்திய காலக் கடன் மற்றும் சொட்டுநீர் பாசனக் கடனாக ரூ. 1.82 கோடி வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள 47 விவசாய கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் டிராக்டருடன் இணைந்த உழவு இயந்திரங்கள் குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போது வரை 4,772 சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள்  டிராக்டர் மூலம் தங்களது நிலத்தை உழுதுள்ளனர். தமிழக அரசின் மூலம் சொட்டு நீர்ப் பாசன கருவிகள் அமைக்க ஏக்கருக்கு ரூ. 43816 மானியம் வழங்கப்படுகிறது. இதன்மூலம் 872 விவசாயிகள் சொட்டு நீர்ப் பாசன கருவிகள் அமைத்துள்ளனர் என்றார். கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நா. பன்னீர்செல்வம், மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் வளர்மதி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ். சந்திரசேகர்,  தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் செப்ந்தரராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### வேளாண் பயிர் காப்பீட்டுப் பதிவுமறு ஆய்வு செய்ய பாஜக கோரிக்கை

வேளாண் பயிர் காப்பீட்டுப்பதிவுகளை வருவாய்த்துறை,வேளாண்துறை, கூட்டுறவுத்துறை அதிகாரிகளைக் கொண்டு மீண்டும் மறு ஆய்வு செய்ய வேண்டும் என பாரதீய ஜனதா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் மாநில வணிகர் அணி செயலர் எஸ்.பி. ராஜேந்திரன் வெள்ளிக்கிழமை நீடாமங்கலத்தில் நிருபர்களிடம் கூறியது:

நடப்பாண்டில் மேட்டூர் அணை தாமதமாகத் திறக்கப்பட்டதால் குறுவை சாகுபடி பெருமளவில் பாதிக்கப்பட்டது. இருந்தபோதும் பம்பு செட் வசதியுள்ள விவசாயிகள் குறுவை சாகுபடி செய்தனர். டெல்டா மாவட்ட விவசாயத்திற்கு நீர் பெற்றுத் தர தமிழக முதல்வர் ஜெயலலிதா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார். இது வரவேற்கத்தக்கது.

இதற்கிடையில் தமிழக முதல்வர் வேளாண் காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்து காப்பீட்டுத் தொகையை விவசாயிகள் சார்பாக அரசே செலுத்தும் எனவும் ஆணை பிறப்பித்துள்ளார்.  கிராம நிர்வாக அலுவலர்களிடமிருந்து சிட்டா அடங்கலைப் பெற்று விவசாயிகள் தத்தம்பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் காப்பீட்டுப் பதிவினை செய்து அதற்கான ஒப்புதல் சீட்டினையும் பெற்று வருகின்றனர்.இதில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாக புகார்கள் வந்துள்ளன. நிலம் இல்லாத பலர் கிராம நிர்வாக அலுவலர்களிடம் சிட்டா,அடங்கல் பெற்று

தொடக்க வேளாண் வங்கிகளில் பதிவு செய்து ஒப்புதல் சீட்டுகளைப் பெற்றுள்ளதாக தெரிகிறது. போலி விவசாயிகள் அரசின் காப்பீட்டுத் தொகை பெறும் பட்சத்தில் அரசுக்கு லட்சக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு வேளாண்காப்பீட்டுப் பதிவினை கூட்டுறவுத்துறை,வேளாண் துறை,வருவாய்த்துறை அதிகாரிகளைக் கொண்டு மறு ஆய்வு செய்ய வேண்டும் என்றார்.

## சம்பா பயிருக்கு இழப்பீடு கோரி பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட்ட 30 பேர் கைது

கருகிய சம்பா பயிருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்டக் கோரிக்கைகளை வலியுறுத்தி திருவாரூரில் வெள்ளிக்கிழமை பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட்ட 30 பேரை போலீஸôர் கைது செய்தனர்.

காவிரி மீட்புக்குழுவின் சார்பில் காவிரியில் தண்ணீர் விடுவதை முறைப்படுத்த வேண்டும், தமிழக கனிம வளங்களை மத்திய அரசு எடுக்கக் கூடாது, கருகிப்போன சம்பா பயிருக்கு ஏக்கருக்கு ரூ. 20,000 இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்டக் கோரிக்கைகளை வலியுறுத்தி பொதுப் பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

திருவாரூர் மேற்கு வீதியில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட்ட விடுதலை தமிழ்ப்புலிகள் கட்சியின் நிறுவனத் தலைவர் குடந்தை அரசன், மாநில துணைத் தலைவர் இப்ராகிம், மாவட்டச் செயலர் அலாவுதீன் உள்ளிட்ட 30 பேரை போலீஸôர் கைது செய்தனர்.

## டெல்டா விவசாயிகளுக்கு மாத உதவித்தொகை வழங்கக் கோரிக்கை

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடி செய்து பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு ஜூன் மாதம் வரை மாத உதவித் தொகை வழங்க வேண்டுமென மதிமுக வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் மாவட்டச் செயலர் டி. பாஸ்கர் வெளியிட்டுள்ள அறிக்கை:

நிகழாண்டு கர்நாடகத்திடமிருந்து காவிரியில் தண்ணீர் பெற முடியாத காரணத்தால் சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்டு முற்றிலும் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் பயிர்க் காப்பீடுத் திட்டத்தை டிச.15-ம் தேதியுடன் முடித்திருப்பது வேதனையளிக்கிறது. எனவே பயிர்க்காப்பீடு திட்டத்தை ஜனவரி 31-ம் தேதி வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.

பயிர்க் காப்பீடு நிறுவனங்கள் வழங்கும் தொகையைத் தவிர கேள்விக்குறியாகிவிட்ட டெல்டா விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் மத்திய, மாநில அரசு மாத உதவித்தொகை நிர்ணயித்து ஜூன் மாதம் வரை உதவித் தொகை வழங்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிசான சாகுபடிக்கு பாகுபாடு இல்லாமல் தண்ணீர் வழங்க வேண்டும் : ஜெயதுரை எம்.பி. வலியுறுத்தல்

பிசான சாகுபடிக்கு தண்ணீர் வழங்குவதில் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் புறக்கணிக்கப்படுவதாகவும், அவர்களுக்கு பாகுபாடு இல்லாமல் தண்ணீர் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எஸ்.ஆர். ஜெயதுரை எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்கால், கீழ்கால் தாமிரவருணி பாசன விவசாயிகள் மற்றும் மாவட்ட திமுக விவசாய அணி அமைப்பாளர் நட்டாத்தி காளிதாஸ் ஆகியோர் தூத்துக்குடி எம்.பி. எஸ்.ஆர்.ஜெயதுரையிடம் மனு அளித்தனர்.

இந்நிலையில் தூத்துக்குடி மாவட்ட தாமிரவருணி பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற பாபநாசம் மற்றும் மணிமுத்தாறு அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு ஜெயதுரை எம்.பி. எழுதியுள்ள கடிதம்: பிசான சாகுபடிக்கு தண்ணீர் வழங்குவதில் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் புறக்கணிக்கப்படுவதாகவும், அரசின் அறிவிப்பை உடனே அமல்படுத்தி தண்ணீர் தரவேண்டுமென விவசாயிகள் ஆர்ப்பாட்டம், சாலைமறியல், உண்ணாவிரதம் என பல்வேறு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தாமிரவருணி பாசனத்தில் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள நன்செய் விவசாய நிலங்களின் பிசான சாகுபடிக்கு அனுமதியளித்து, பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளதாக அறிகிறேன்.

ஆனால், இதுவரை தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விளைநிலங்களுக்கு தண்ணீர் தரப்படவில்லை. அரசின் ஆணையை நம்பி விவசாயிகள் விதை, நெல், உரங்கள் மற்றும் இடுபொருள்களை வாங்கிய நிலையில், நாற்றுபோடக் கூட பாசனக் குளங்களில் தண்ணீர் இல்லாத அவலநிலை உள்ளது. பாபநாசம் அணையிலிருந்து குறைவான தண்ணீரே எடுக்கப்பட்டு வருவதாக அறிகிறேன். அதுவும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கால்வாய்களில் மட்டும்

திறந்து விடப்பட்டு, தூத்துக்குடி மாவட்ட பாசன நிலங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே கார் மற்றும் முன்கார் சாகுபடியை இழந்த விவசாயிகள் பிசான சாகுபடியையும் இழக்க நேரிடுமோ என்ற கலக்கத்தில் உள்ளனர். எனவே, பாபநாசம் அணையிலிருந்து கூடுதலாக தண்ணீர் திறப்பதுடன், மணிமுத்தாறு அணையிலிருந்தும் தண்ணீர் திறந்துவிட்டு தூத்துக்குடி மாவட்ட தாமிரவருணி பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

## வறட்சியால் கருகிய நவதானியப் பயிர்கள் : இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டாரத்தில் வறட்சியால் நவதானியப் பயிர்கள் கருகிவிட்டதால், அதற்கு இழப்பீடு கேட்டு ஆட்சியரிடம் விவசாயிகள் வெள்ளிக்கிழமை மனு அளித்தனர்.

திருநெல்வேலியில் ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட விவசாயிகள் கோரிக்கை தின கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் சி.சமயமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் விவசாயப் பிரதிநிதிகள் பலரும் பங்கேற்று பல்வேறு கோரிக்கைகளை எழுப்பினர். அப்போது சங்கரன்கோவில் வட்டாரம் பெருங்கோட்டூர் பகுதியைச் சேர்ந்த மானாவாரி மற்றும் புன்செய் நில விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ். ஜெயராமன், ஆயக்கட்டு விவசாயிகள் சங்கத் தலைவர் சி. செல்லத்துரை உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆட்சியரை சந்தித்து மனு அளித்தனர்.

மனு விவரம்: பெருங்கோட்டூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் மக்காசோளம், உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு ஆகிய நவதானியப் பயிர்களைப் பயிரிட்டுள்ளனர். இப்பயிர்களை விதைக்கவும் நடவு செய்யவும் போதுமான மழை இருந்தது. ஆனால், பயிர்கள் முளைத்தபின் மழை பெய்யவில்லை. இதனால், பயிர்கள் இப்போது கருகிப் பாழாகிவிட்டன.

கடன் வாங்கியும், நகைகளை அடமானம் வைத்தும் பயிர் செய்த விவசாயிகள் தற்போது பயிர்கள் கருகிவிட்டதால் மிகவும் சோகத்தில் உள்ளனர்.

பயிர்கள் கருகியுள்ள நிலங்களைப் பார்வையிட்டு உரிய நிவாரணத் தொகையை வழங்கவும், விவசாயிகள் கடன் தொல்லையிலிருந்து விடுபட்டு வாழவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது. நவதானியப் பயிர்கள் கருகியுள்ள விவசாய நிலங்களின் புகைப்படங்களையும் ஆட்சியரிடம் காட்டி அவர்கள் முறையிட்டனர்.

## தென் கடலோர மாவட்டங்களில் லேசான மழை வாய்ப்பு

காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தென் கடலோர மாவட்டங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு அந்தமான் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. வியாழக்கிழமை குமரிக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை தற்போது வலுவிழந்துள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில் மழை பெய்யக் கூடும்.

மாநிலத்தின் பிற இடங்களில் வறண்ட வானிலையே நிலவும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். பலத்த காற்று வீச வாய்ப்புள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியின் கடலோர மாவட்டங்களில் பலத்த தரைக் காற்று வீசும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மிதமான மழை : அணைகளுக்கு குறைந்த அளவில் நீர்வரத்து

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் கடந்த சில தினங்களாக மிதமான மழை பெய்து வருகிறது. இருப்பினும் அணைகளுக்கு பெரிய அளவில் நீர்வரத்து இல்லாததால், விவசாயிகள் தொடர்ந்து கவலையில் உள்ளனர்.

தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடி செய்யப்படவில்லை. கடந்த 35 ஆண்டுகளில் இதுபோன்ற நிலை இருந்ததில்லை.

இதற்கிடையே, வடகிழக்குப் பருவமழை கடந்த அக்டோபர் மாதம் 2ஆவது வாரத்தில் தொடங்கி பெய்தது.

இதனால், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசம், சேர்வலாறு, கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் உயரத் தொடங்கியது. இதைத்தொடர்ந்து, கடந்த நவம்பர் மாதம் 9ஆம் தேதி கடனாநதி, ராமநதி அணைகள் மூலம் பாசன நிலங்களுக்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. பாபநாசம் அணையில் இருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 11 அணைகள் மூலம் பாசனம் பெறும் 86,107 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

பருவமழை தொடர்ந்து பெய்யாததால் அணைகளின் நீர்மட்டம் எதிர்பார்த்தவாறு உயரவில்லை. தற்போது அணைகளின் நீர்இருப்பு வெகுவாகக் குறைந்து காணப்படுகிறது.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை பெய்து வருகிறது. இருப்பினும், அணைகளுக்கு பெரிய அளவில் நீர்வரத்து இல்லை. வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழை அளவு (மி.மீட்டரில்) பாபநாசம் அணை 5, பாபநாசம் கீழ்அணை 2, சேர்வலாறு அணை 2, மணிமுத்தாறு அணை 1.4, அம்பாசமுத்திரம் 7.2, சேரன்மகாதேவி 1.4. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 597.45 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 134 கனஅடியும், கடனாநதி அணைக்கு 23.29 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 25.55 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணையில் இருந்து பாசனத்துக்கு விநாடிக்கு 605 கனஅடியும், மணிமுத்தாறு அணையில் இருந்து பெருங்கால் மதகில் 35 கனஅடியும், கடனாநதி அணையிலிருந்து விநாடிக்கு 50 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து விநாடிக்கு 45 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது

**நெல்லை மாவட்ட அணைகளின் நீர்மட்ட நிலவரம்**

**22.12.2012 அணைகளின் நீர்மட்டம்**

பாபநாசம் அணை 60.65 அடி

சேர்வலாறு அணை 70.83 அடி

மணிமுத்தாறு அணை 70.43 அடி

கடனாநதி அணை 62.40 அடி

ராமநதி அணை 57.25 அடி

**பதிவான மழை**

பாபநாசம் அணை 6 மி.மீ

பாபநாசம் கீழ் அணை 1 மி.மீ

சேர்வலாறு அணை 4 மி.மீ

மணிமுத்தாறு அணை 1.4 மி.மீ

அம்பாசமுத்திரம் 2 மி.மீ

சேரன்மகாதேவி 2 மி.மீ

## நாமக்கல் முட்டை விலை நிலவரம்

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.22, சென்னையில் ரூ.3.27.

**கறிக்கோழி விலை :**

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.62, முட்டைக்கோழி கிலோ ரூ.40.

## அள்ளித் தரும் அமுத சுரபிகள்

வேளாண் வளர்ச்சிக்கு அடிப்படை தண்ணீராகும். அதிலும் மழை நீருக்கு மாற்று வேறு எதுவுமே இல்லை. தரத்திலும் சரி, அளவிலும் சரி மழை நீருக்கு நிகர் மழை நீரே.

இப்படிப்பட்ட வேளாண்மைக்கு அருமருந்தாகிய மழை நீரை ஒவ்வொரு கிராமத்தினரும் தங்களுக்கிடையே உள்ள பல்வேறு பேதங்களை மறந்து முழுமையாகச் சேமித்து விவசாயத்துக்குப் பயன்படுத்தினால் வேளாண் வருவாய் கணிசமாகப் பெருகும்.

முதல்வர் ஜெயலலிதாவின் தொலைநோக்குத் திட்டத்தால், கடந்த 2002-இல் கட்டப்பட்ட வீடுகள் அனைத்திலும் கட்டாயம் மழைநீர் சேகரிப்பு செயல்படுத்தப்பட வேண்டும் என்ற சட்டத்தால் பெருவாரியான மக்களிடம் மழைநீர் சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. வீடுகளில் சேகரிக்கப்படும் மழைநீரின் அளவு கிடைக்கின்ற மொத்த மழையளவில் ஒன்று முதல் மூன்று சதவிகிதமே.

ஆனால், மிகச் சிறப்பான முறையில் 60 முதல் 70 சதவிகித மழைநீரைச் சிறப்பாகச் சேமிக்கின்ற உத்தியை நம் முன்னோர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் உருவாக்கி உள்ளனர். அது இன்றளவும் நன்கு செயல்பட்டுக் கொண்டுள்ளது. அதுவே ஏரிகள் மற்றும் கண்மாய்கள்.

ஏரிகளைப் பராமரிப்பதும், பாதுகாப்பதும் ஒவ்வொரு கிராமத்தினர் மற்றும் விவசாயிகளின் கடமையாகும். ஆனால், பல ஏரிகளில் ஆக்கிரமிப்புகள் இடம்பெற்றுள்ளன; மழைநீரைத்

தேக்குவதை விடுத்து கரைகளை வெட்டி தேங்கிய நீரை வீணாக்குவது போன்ற செயல்களையும் காணும்போது வருத்தமே மேலிடுகிறது.

சமீபத்தில்கூட தீபாவளிக்கு முன்னதாகப் பெய்த பெருமழையில் நிரம்பிய சில ஏரிகளின் கலங்கல்கள், மதகுகள் பழுதானதால் ஏரித் தண்ணீர் வெளியேறி வீணாவதையும் ஏரிக்கரை திடீரென உடைப்பெடுத்து தண்ணீர் வயலில் பாய்ந்ததையும் பத்திரிகைகளில் படித்து மனம் பதைக்க நேர்ந்தது.

ஏரிகளின் மூலம் மக்களுக்குக் கிடைக்கின்ற பலன்கள் ஏராளம். சமீபகாலம் வரை வேளாண்மைக்கு மட்டுமே நீர் அளித்து வந்த ஏரிகள் தற்போது நகர்ப்புற மக்களின் குடிநீர்த் தேவைக்கு மிகவும் உறுதுணையாகி உதவுகிறது.

தமிழகத்தின் 41,260 ஏரிகளில் 20 மிகப்பெரும் ஏரிகளாகும். மொத்தமுள்ள அனைத்து ஏரிகளின் பாசனப் பரப்பு 10,11,862 ஹெக்டேர். இதில் மேற்கூறப்பட்ட 20 பெரிய ஏரிகளின் பாசனப் பரப்பு 52,806 ஹெக்டேர். அதாவது, மொத்த பாசனப் பரப்பில் இது 5.2 சதவீதமாகும்.

இந்த 20 பெரிய ஏரிகளுள் செம்பரம்பாக்கம் (ஆயக்கட்டு 5270 ஹெக்டேர்) மற்றும் வீராணம் (18,160 ஹெக்டேர்) ஏரிகள் இப்போது சென்னை மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்புவரை 38 கிராமங்களுக்கு 8 மதகுகள் மூலம் 5,270 ஹெக்டேர் நிலத்துக்குப் பாசனம் அளித்த செம்பரம்பாக்கம் ஏரி இப்போது 13 கிராமங்களுக்கு ஏறத்தாழ 2,000 ஹெக்டேர் மட்டுமே பாசனம் அளிக்கிறது. மீதமுள்ள நிலங்கள் நகர்ப்புறங்களாகவும் வீட்டு மனைகளாகவும் தொழிற்சாலைகளாகவும் மாறிவிட்டன. இம் மாற்றத்தின் பலனாக விவசாயத்துக்குச் செல்ல வேண்டிய தண்ணீர், சென்னை மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

மாறாக, வீராணம் இன்னும் முழுமையான நீர்ப்பாசன ஏரியாக இருப்பதோடு அல்லாமல் சென்னைக்குக் குடிநீரையும் அளித்துவருகிறது. வீராணம் ஏரியின் ஆயக்கட்டான 18,160 ஹெக்டேர் நிலம் 97 கிராமங்களில் பரவியுள்ளது. இத்தனை கிராமங்களுக்கும் 33 மதகுகள் மற்றும் கால்வாய்கள் மூலம் நீர்ப்பாசனம் கிடைக்கிறது.

இந்த 33 மதகுகளில், "ஒரு மதகு ஒரு கிராமப் பாசனம்' என்ற அளவில் 9 மதகுகளும், "ஒரு மதகு 12 கிராமங்களுக்குப் பாசனம்' என்ற அளவில் இரு மதகுகளும் உள்ளன. மீதமுள்ள 22 மதகுகள் இதற்கு இடைப்பட்ட அளவான இரண்டு முதல் 11 கிராமங்கள் என்ற அளவில் பாசனம் அளித்து வருகின்றன.

இந்த ஏரியின் முக்கியச் சிறப்பு இதன் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இருந்து கிடைக்கும் மழைநீர் மட்டுமல்லாமல் காவிரியின் நீர் ஆதாரத்தையும் பெறுகிறது.

ஏரிகள் விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதோடல்லாமல் கீழ்க்கண்ட பல்வேறு பலன்களை அந்தந்த கிராம மக்களுக்குக் கைமாறின்றி அளித்து வருகின்றன.

நான்கு மாதங்களுக்கு மேல் நீர் தேங்கும் பல்லாயிரக்கணக்கான ஏரிகளில் மீன் வளர்ப்பு ஒரு முக்கியத் தொழிலாகும். ஊட்டச்சத்து மிகுந்த, உள்ளூர் ஏரிகளில் கிடைக்கும் மீன்கள் அப்பகுதி மக்களுக்கு ஒரு "திருவிழா' போன்ற விருந்தாகும்.

பல பெரிய ஏரிகளில் கிடைக்கும் மீன்களை பல லட்ச ரூபாய்க்கு ஏலம்விட்டு ஊர் மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்துகின்றனர். பல கிராமங்களில் கோயில்கள் கட்டவும் கூடுதல் பொதுப் பராமரிப்புக்கும் இந்த மீன் ஏல வருவாயே பிரதான நிதியாகும்.

மீன் வருவாய்க்கு அடுத்து மரம் வளர்ப்பு. சமீபகாலம்வரை பெரும்பாலான பெரிய ஏரிகளில் வனத்துறையினர் கருவேல் போன்ற மரங்களை நட்டு வளர்த்து சில ஆண்டுக்குப் பின் அம் மரங்களை ஏலம் விட்டு கிடைக்கின்ற நிதியில் ஒரு பகுதியை அந்தந்த கிராமங்களுக்கு அவற்றின் உள்ளூர் வளர்ச்சிப் பணிகளுக்கு அளித்து வந்துள்ளனர்.

இது தவிர, ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மற்றும் ஏரிக் கரைகளில் யாரும் பயிரிடாமல் தானாகவே வளரும் சீமைக் கருவேல முள் மூலம், சில ஆண்டுகளுக்கு ஒரு முறை பெரும்பாலான ஏரிகளில் லட்சக்கணக்கான ரூபாய்க்கு மேல் ஏல வருவாய் கிடைக்கிறது.

உதாரணமாக, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை கோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பொதுப்பணித்துறை கண்மாய்களின் நீர்வள - நிலவளத் திட்ட மேம்பாடு பற்றிய ஆய்வின்போது கீழ்க்கண்ட 4 ஏரிகளின் மர ஏல வருவாய் விவரம் அட்டவணைக்குள் தரப்பட்டுள்ளது.

எந்த ஒரு தனி நபரின் உழைப்பும் இல்லாமல் ஓரிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை பெரும்பாலான ஏரிகள் மேற்கூறப்பட்ட வகையில் பல லட்சக்கணக்கான ரூபாயை கிராமங்களுக்கு அளித்து உதவும்போது இந்த ஏரிகளை "அமுத சுரபிகள்' என அழைத்தால் அது மிகையாகாது.

அடுத்து, ஏரிகளில் நீர்தேங்கும் பகுதிகளில் ஆண்டுதோறும் வந்துசேரும் வண்டல் மண் மிகச் சிறந்த இயற்கை உரமாகும். பல ஏரிகளில், ஏரி நீர் வடிந்ததும் இந்த ஏரி வண்டல் மண்ணில் நேரடியாகவே வெள்ளரி, பாகல், வெண்டை போன்ற பல்வேறு காய்கறிப் பயிர்களை அருகிலுள்ள கிராம விவசாயிகள் பயிரிட்டு கணிசமான வருவாயைப் பெறுகின்றனர்.

மேலும் பல விவசாயிகள் இந்த வண்டல் மண்ணைத் தங்களுடைய நிலங்களுக்கு எடுத்துச் சென்று, தரமிழந்து காணப்படும் தங்களுடைய வயல் மண்ணுடன் கலந்து பயன்படுத்தி அதிக அளவு கண்டுமுதல் பெறுகின்றனர்.

அறுவடைக் காலம் முடிந்து ஏரிகளில் தண்ணீர் வற்றியபின் பல ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் புல் வளர்ந்து அந்தந்த கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு முக்கிய பசுந்தீவனத்தை அளித்து உதவுகிறது.

இன்னும் சில கிராமங்களில் தங்களுடைய கிணறுகளில் கிடைக்கும் நீர்வளம் போதுமானதாக இல்லாததை உணர்ந்து, ஏரிகளில் போதுமான அளவு நீர் நிறைந்தும் அதனை நேரடியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் மதகுகள் அனைத்தையும் அடைத்து அந்த ஏரி நீரினைக் கிணறுகளின் நீர்ப் பெருக்கத்துக்கான ஊற்றுக்காலாக மாற்றிப் பலனடைகின்றனர்.

இறுதியாக "செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்ற பழமொழிக்கு ஏற்ப, இப்போது பல ஊர்களில் சிறு சிறு ஏரிகளை முழுமையாகத் தூர்த்து, வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள், தனியாருக்கு வீடுகள், அரசு அலுவலகங்கள், கல்லூரிகள், நீதிமன்றங்கள், கல் குவாரிகள், பஸ் நிறுவனங்களின் மிகப் பிரம்மாண்டமான பணிமனைகள் என்று மாற்றி வருகின்றனர். ஏரிகள் அழிந்தாலும் வேற்றுருவில் சமுதாயத்துக்கே பயன்படுகின்றன.

இவ்வளவு நன்மைகளை நமக்கு நேரடியாக அளிக்கவல்ல ஏரிகளைக் காப்பாற்றத் தமிழர்களாகிய நாம் என்ன கைம்மாறு செய்கிறோம்?

உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூ.2,200 கோடி நிதியுதவியுடன் ஏரிப்பாசன மேம்பாடு குறித்து தமிழக அரசால் கடந்த 5 ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வள - நிலவள திட்டத்தின்படி, நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிப்பாசன கிராமங்களை ஆய்வு செய்து வரும்போது அந்தந்த கிராம ஏரிப்பாசன விவசாயிகளை அதிகாரிகள் அணுகுகின்றனர்.

""உங்கள் பாசன மேம்பாடு மற்றும் பராமரிப்புக்காக ஆண்டுக்கு ஒரு ஏக்கருக்கு நூறு ரூபாய் வீதம் உங்கள் ஏரிப்பாசன சங்கத்துக்கு வழங்குங்கள்'' என்று அறிவுறுத்துமாறு ஏரிப்பாசன சங்கத் தலைவர்களிடம் கூறினால், உடனே அனைவரும் எழுந்து சென்றுவிடுகின்றனராம்.

இப்போதைய நிலையில் ரூ.2,200 கோடி செலவிட்டு ஏரிகளை ஓரளவு செப்பனிட்டுவிட்டால் மீண்டும் அவற்றைப் பராமரிக்க வேறு எந்த ஒரு நிதி ஆதாரமும் ஏரிகளுக்கென்று இல்லை.

இந்த அளவில்தான் பல்வேறு நலத்திட்டங்களும் அரசு உதவிகளும் மக்களிடையே சென்று சேர்கின்றன. இந்த நிலை மாற வேண்டுமானால் விவசாயிகளும் கிராம மக்களும் விழிப்புணர்வு பெறவேண்டும். அதற்கு கல்வி அவசியம். அத்துடன் அரசின் கள விளம்பரத்துறைகளும் தீவிரமாகச் செயல்பட வேண்டும். அள்ளித்தரும் அமுதசுரபிகளான ஏரிகளைக் காப்பாற்றுவோம்.

## விவசாயத் தொழிலு க்கு அச்சுறுத்தலான மீத்தேன் வாயு திட்டத்துக்கு தடை விதிக்க வேண்டும்

காவிரி டெல்டா மாவட்டங்களின் விவசாயத் தொழிலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் பெருமளவு நிலக்கரி படிமம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலக்கரி படுகைகளைச் சுற்றிலும் பெருமளவு மீத்தேன் வாயு உள்ளது. நிலத்துக்குக் கீழேயுள்ள நீரின் அழுத்தம் காரணமாக இந்த மீத்தேன் வாயு அதே இடத்தில் நிலையாக உள்ளது. ஆகவே, மேலே அழுத்திக் கொண்டிருக்கும் நீரை வெளியேற்றினால் மட்டுமே, மீத்தேன் வாயுவை வெளியில் கொண்டு வர இயலும்.

இந்நிலையில், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் நிலக்கரி படுகைகளுக்கு இடையே உள்ள மீத்தேன் வாயுவை சோதனைக் கிணறுகள் அமைத்து தேடுதல் மற்றும் வணிக ரீதியான அதன் உபயோகம் பற்றி ஆய்வு நடத்துவதற்காக கிரேட் ஈஸ்டன் எனர்ஜி கார்ப்பரேஷன் என்ற தனியார் நிறுவனத்துக்கு மத்திய பெட்ரோலிய அமைச்சகம் கடந்த 2010-ம் ஆண்டு உரிமம் வழங்கியது.

இந்தத் திட்டம் தொடர்பாக முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழக அரசுக்கும், அந்த தனியார் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் திட்டத்துக்கு கடந்த செப்டம்பர் மாதம் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.

இந்த நிலையில் இந்தத் திட்டத்துக்கு தடை விதிக்கக் கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் திருவாரூர் மாவட்ட துணைச் செயலாளர் பி.ஆர். பாண்டியன் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல் செய்துள்ளார்.

திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களைச் சேர்ந்த 667 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது. இந்த இரண்டு மாவட்டங்களிலும் சுமார் 1 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ள இடத்தில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட

உள்ளது. இந்தத் திட்டத்தை செயல்படுத்தினால் பெருமளவு நிலத்தடி நீர் வெளியேற்றப்படும். இதனால் விவசாய சாகுபடி கடுமையாகப் பாதிக்கப்படும். அதேபோல் பூமிக்கடியில் இருந்து வெளியேற்றப்படும் நீரில் சோடியம், மெக்னீசியம் போன்ற ரசாயனங்கள் பெருமளவில் கலந்திருக்கும். அத்தகைய தண்ணீரால் மண் மாசடைந்து, விவசாய உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்படும்.

மேலும், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு சட்ட விதிகளின்படி, நிலக்கரி படுகைகளுக்கு இடையேயுள்ள மீத்தேன் வாயுவை எடுப்பதற்கான உரிமம் அளிக்க முடியாது. இந்நிலையில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள உரிமமே சட்ட விரோதமானது. ஆகவே, இந்தத் திட்டத்தை செயல்படுத்த நீதிமன்றம் தடை விதிக்க வேண்டும் என்று அந்த மனுவில் பாண்டியன் கோரியுள்ளார்.

இந்த மனு தலைமை நீதிபதி எம்.ஒய். இக்பால், நீதிபதி டி.எஸ். சிவஞானம் ஆகியோரைக் கொண்ட முதன்மை அமர்வில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வழக்குரைஞர் எம். ராதாகிருஷ்ணன் ஆஜராகி வாதிட்டார். அப்போது, மனு மீதான விசாரணையை ஜனவரி 3-ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## விவசாயிகள் தற்கொலையை தடுக்கக்கோரி வழக்கு

காவிரி டெல்டா மாவட்டங்களில் நடைபெறும் விவசாயிகளின் தற்கொலை மரணங்களைத் தடுக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வழக்குரைஞர் ஜி. ராஜேந்திரன் பொது நல மனு தாக்கல் செய்துள்ளார். நெல் சாகுபடிக்குத் தேவையான தண்ணீர் கிடைக்காததால் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய காவிரி டெல்டா மாவட்டங்களில் நெற்பயிர்கள் கருகி வருகின்றன. பெருமளவில் கடன் வாங்கி சாகுபடி செய்த விவசாயிகள், பயிர்கள் கருகுவதால் கடும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இந்தப் பாதிப்புகளை எதிர்கொள்ள இயலாமல் இதுவரை 5 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இந்தத் தற்கொலை மரணங்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய பிரதான கடமை தமிழக அரசுக்கு உள்ளது. இத்தகைய மரணங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.20 லட்சம் இழப்பீடு வழங்கவும், இந்தக் குடும்பங்களில் தலா ஒருவருக்கு அரசுப் பணி வழங்கவும், விவசாயிகளுக்கு ஏக்கருக்கு தலா ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்கவும் அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று ராஜேந்திரன் தனது மனுவில் கோரியுள்ளார்.

இந்த மனு தலைமை நீதிபதி எம்.ஒய். இக்பால், நீதிபதி டி.எஸ். சிவஞானம் ஆகியோரைக் கொண்ட முதன்மை அமர்வு முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் ராஜேந்திரன், கடந்த 2003-ம் ஆண்டிலும் காவிரி டெல்டா மாவட்டங்களில் இதேபோல் வறட்சி ஏற்பட்டு ஏராளமான விவசாயிகள் பட்டினியாலும், தற்கொலை செய்து கொண்டும் மரணம் அடைந்தனர்.

நான் தொடர்ந்த வழக்கில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்தே பட்டினிச் சாவுகள் தடுத்து நிறுத்தப்பட்டன. அதேபோல் இப்போதும் நீதிமன்றம் இந்தப் பிரச்னையில் தலையிட்டு, காவிரி டெல்டா விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து மனு மீதான விசாரணையை ஜனவரி முதல் வாரத்துக்கு ஒத்தி வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

22.12.2012 A.M

**சம்பா பயிருக்கு நஷ்டஈடு கேட்டுகலெக்டரை விவசாயிகள் முற்றுகை தஞ்சாவூர் :**

சம்பா பயிருக்கு நஷ்ட ஈடு வழங்கக்கேட்டு, குறைதீர்க்கூட்டத்தில் கலெக்டரை முற்றுகையிட்டு, விவசாயிகள் போராட்டம் நடத்தியதால் திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

தஞ்சையில் விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் கலெக்டர் பாஸ்கரன் தலைமையில் நேற்றுக்காலை, 10.15 மணிக்கு துவங்கியது. டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார், குருங்குளம் சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், வேளாண்மை இணை இயக்குனர் முகமது யாகியா உள்பட அனைத்துத்துறை அலுவலர்களும் பங்கேற்றனர்.கலெக்டர் பாஸ்கரன் பேசுகையில், ""தஞ்சை மாவட்ட மக்களின் குறைதீர்மனுக்களை பரிசீலித்து, விரைந்து தீர்வு வழங்கியதற்காக, சென்னையில் முதல்வர் தலைமையில் நடந்த கூட்டத்தில் வழங்கப்பட்ட சான்றிதழ் பெற காரணம், அனைத்து துறை அலுவலர்களின் ஒத்துழைப்பு தான் காரணம். இதற்காக நன்றி தெரிவிக்கிறேன்,'' என்றார்.அப்போது, கூட்ட அரங்கத்துக்குள், நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் நுழைந்து, கலெக்டரிடம் டெல்டா பாசன மாவட்டங்களில் காவிரி நீரின்றி பயிர்கள் வாடும் நிலையை மத்திய, மாநில அரசுகளிடம் விளக்கி, உரிய நிவாரணத்தை பெற்றுத்தர வேண்டும் என, வலியுறுத்தி கோரிக்கை மனுக்களை வழங்கினர்.பின்னர், கலெக்டர் இருக்கை முன், தரையில் அனைவரும் அமர்ந்து கோஷங்களை எழுப்பி, முற்றுகை போராட்டம் நடத்தினர். இதனால், பரபரப்பு ஏற்பட்டது. மேலும், நடப்பாண்டு சம்பா பயிர்கள் காய்ந்து கருகி வருகிறது. இதனால், விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரம் சிதைந்து விட்டது. இதை காப்பாற்ற மத்திய அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு, தமிழகத்துக்கு தேவையான பங்களிப்பு காவிரி நீரான, 12 டி.எம்.சி.,யை பெற்றுத்தர வேண்டும்.டெல்டா மாவட்ட விவசாயிகள், கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்றிருந்த பயிர் கடன்களை ரத்து செய்ய வேண்டும், சம்பா பருவத்தில் ஏற்பட்ட இழப்பான ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈட்டை தமிழக அரசு வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.விவசாயிகளின் முற்றுகை போராட்டத்துக்கு இடையேயும் விவசாயிகள், சங்க பிரதிநிதிகள் கலெக்டர் பாஸ்கரனிடம் கோரிக்கை மனுக்களை கொடுத்தவாறு

இருந்தனர்.பாதுகாப்பு பணியிலிருந்த டி.எஸ்.பி., சங்கர் தலைமையிலான போலீஸார் கலெக்டர் உத்தரவுக்காக காத்திருந்தனர். ஆனால், டி.எஸ்.பி.,யை அருகே அழைத்து, விவசாயிகளான போராட்டத்தினரை, அவர்களது கோரிக்கையை தெரிவிக்க அனுமதியளித்தது போல, கலெக்டர் கூறினார். அதனால், போலீஸார் கெடுபிடி ஏதும் காட்டாமல் விலகி விட்டனர். இதையடுத்து, வெறும் கோஷங்களுடன் இரண்டு மணி நேரத்துக்கும் மேலான தங்களது போராட்டத்தை நிறைவு செய்த விவசாயிகள், மீண்டும் கலெக்டரிடம் கோரிக்கையை வலியுறுத்திவிட்டு கலைந்து சென்றனர்

**டெல்டா விவசாய முறையில் மாற்றம் : விவசாயிகள் விருப்பம்**

திருத்துறைப்பூண்டி: ""காவிரி டெல்டா பாசன விவசாயத்தில் ஒரு புதிய மாற்றம் உருவாக வேண்டும். அந்த மாற்றம் நமது முன்னோர் சாகுபடி செய்து வந்த பாரம்பரிய நெல் ரகங்களை முன்னிறுத்தி அமைய ÷வண்டும்,'' என டெல்டா ரோட்டரி சங்கத்தலைவர் சாமிநாதன் வலியுறுத்தியுள்ளார்.திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரங்கம் இயற்கை வேளாண்மை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் கிரியேட் பண்ணையில், பள்ளி மாணவ, மாணவியருக்கான இயற்கை வேளாண்மை, பாதுகாப்பான உணவு குறித்த கருத்தரங்கம் நடந்தது. இதில், ஆலத்தம்பாடி ஜானகி அண்ணி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் சுந்தரேசன் முன்னிலை வகித்தார். ஆசிரியர் குமணன் வரவேற்றார். ரோட்டரி சங்க தலைவர் சாமிநாதன் தலைமை வகித்து பேசியதாவது:தற்போது டெல்டா பாசன மாவட்டங்களில் வறட்சி நிலவி சூழலில், எதிர்காலத்திலாவது விவசாயத்தில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. பாரம்பரிய ரக நெல் சாகுபடி, இயற்கை விவசாயம் போன்ற முறைகள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பின்றியும், உடல்நலத்துக்கு தீங்கின்றியும் அமைந்திருந்தது.இதை உறுதிப்படுத்தும் வகையில், அனைவருக்கும் நஞ்சில்லா உணவு கிடைக்கும் நோக்கத்தில், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரிடம் இதுபோன்ற கருத்தரங்குகள் நடத்தப்படுகிறது.கருத்தரங்கின் முக்கிய நோக்கம், விவசாயத்தை கைவிட்டு விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும் விலகும் சூழலை மாற்றுவது ஆகும். இதை ஏற்படுத்த மாணவர் சமுதாயத்தால் மட்டுமே முடியும். எனவே, மாணவர்களுக்கு முக்கியத்துவம் அளித்து, இயற்கை வேளாண்மை குறித்து விபரங்களை தெரிவித்து வருகிறோம்.இவ்வாறு அவர் பேசினார்.இதையடுத்து, பாரம்பரிய நெல் ரகங்களை, விவசாய முறையில் பெருமளவில் புகுத்தி, விளைவிக்கும் முடிவை விவசாயிகளும் ஏற்று ஆதரவு தெரிவித்தனர்.பின்னர் நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன், 63

பாரம்பரிய நெல் ரகங்களின் சிறப்புகள், சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். இதைத்தொடர்ந்து, பயிற்சியில் பங்÷கற்ற மாணவ, மாணவியருக்கு பூச்சி விரட்டி தயாரிப்பது, பஞ்சகவ்யம் தயார் செய்வது குறித்து நேரடி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.தமிழக இயற்கை உழவர் இயக்க நாகை மாவட்டத்தலைவர் சதாசிவம், வேவ்ஸ் பவுண்டேஷன் இயக்குனர் வரதராஜன், விவசாயி கரிகாலன், ரோட்டரி துணைத்தலைவர் ரகுராமன், பாசனத்தலைவர் கணேசன் உள்பட பலர் பங்கேற்றனர். முடிவில், விதை வங்கி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

**நெற்பயிரில் குருத்துப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

முக்கூடல் : முக்கூடல் வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:பாப்பாக்குடி வட்டாரத்தில் பிசான பருவ நெல் சாகுபடி பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த வருடங்களில் குருத்துப்பூச்சி தாக்குதலால் மகசூல் இழப்பு ஏற்பட்டு ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்த வருடம் குருத்துப்பூச்சி தாக்குதலில் இருந்து பயிரை பாதுகாத்துக்கொள்ளும் தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்.குருத்துப்பூச்சியின் தாய் அந்துப்பூச்சிகள் நெற்பயிரின் இலைகளின் நுனியில் குவியல் குவியலாக முட்டைகளிடும். இம்முட்டைகள் பழுப்பு மற்றும் மஞ்சள் நிற ரோமங்களால் மூடப்பட்டிருக்கும். இதில் இருந்து வெளிவரும் இளம் மஞ்சள் நிற புழுக்கள் நெற்பயிரின் தூர்களை தாக்கி சேதம் ஏற்படுத்தும். அப்போது பயிர் குருத்து வாடிவிடும். அந்த குருத்தினை கைகளால் உருவினால் எளிதாக வந்து விடும். குருத்தின் அடியில் பூச்சியினால் ஏற்பட்ட சேதமும் கதிரின் தண்டினை துண்டித்திருப்பதும் தெரியும். இந்த அறிகுறி தெரிந்தால் விவசாயிகள் உடனடியாக புரொப்பனோபாஸ் 50 சதம், இன்டோசோகார்ப் 14.50 சதம், கார்டாப் ஹெட்ரோகுளோரைடு 50 சதம் ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை எடுத்துக்கொள்ள வேண்டும். திரவங்களான சாண்டோவிட், பைட்டோவிட், லிங்காவிட் ஆகியவற்றில் ஒன்றினை ஏக்கருக்கு 100 மி.லி வீதம் கலந்து சீராக தெளித்து குருத்துப்பூச்சியினை கட்டுப்படுத்தி மகசூல் இழப்பை தடுக்கலாம். மேலும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளில் ஒன்றான இனக்கவர்ச்சி பொறிகளை நெல் நடவு செய்த உடன் ஒரு ஏக்கரில் 4 எண்ணம் வீதம் வைத்து ஆண் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழித்து குருத்துப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**பாப்பாக்குடி பகுதி விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர் அறிவுறுத்தல்**

முக்கூடல் : முக்கூடல் வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார் பாப்பாக்குடி வட்டார விவசாயிகளுக்கு கூறிஇருப்பதாவது: ஆசோஸ்பைரில்லம் உயிர் உரமானது காற்றில் உள்ள தழைச்சத்தை எடுத்து நெல் பயிரிருக்கு கொடுப்பதோடு மண்ணிலும் நிலை நிறுத்தும். இதனால் நெல் பயிரில் வேர் வளர்ச்சி அதிகமாகி பயிர் அதிக அளவில் தழைச்சத்தை எடுத்து நன்கு வளர்ந்து அதிக தூர்கள் உருவாகி பயிர் மகசூல் அதிகமாகும்.பாஸ்போபாக்டீரியா உயிர் உரமானது மண்ணில் பயிருக்கு கிடைக்காத நிலையில் உள்ள மணிச்சத்தை கரைத்து நெல் பயிர் எளிதில் மணிச்சத்தை எடுத்து மகசூலை பெருக்க வழி வகை செய்கிறது.ஒரு ஏக்கருக்கு தேவையான 24 கிலோ நெல் விதையை 24 லிட்டர் நீரில் ஊற வைக்கும் பொழுது அதில் இரண்டு பொட்டலம் நெல் அசோஸ்பைரில்லம் மற்றும் இரண்டு பொட்டலம் பாஸ்போபாக்டீரியா உயிர் உரங்களை கலக்க வேண்டும்.

இதன்மூலம் நெல் விதை முளைகட்டும்பொழுது உயிர் உரங்கள் அதில் ஊடுருவி செயல்பட்டு மேலும் பெருகும்.ஒரு ஏக்கருக்கு தேவையான நெல் நாற்றின் வேரினை நான்கு பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் நன்கு பொட்டலம் பாஸ்போபாக்டீரியா கலந்த கரைசலை 15 முதல் 30 நிமிடம் நனைத்து பின்பு நடவு செய்ய வேண்டும். மேலும் நடவு வயலில் நடவு செய்வதற்கு முன்பு 20 கிலோ பொடி செய்த நன்கு மக்கிய தொழு உரத்துடன் நன்கு பொட்டலம் நெல் அசோஸ்பைரில்லம் மற்றும் நான்கு பொட்டலம் பாஸ்போபாக்டீரியா உயிர் உரங்களை கலந்து வயலில் சீராக தூவவேண்டும். எக்காரணம் கொண்டும் ரசாயன உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங்களுடன் உயிர் உரங்களை கலந்து இட கூடாது. எனவே பாப்பாக்குடி பகுதி வட்டார விவசாயிகள் உயிர் உரங்களை அதிக அளவில் பயன்படுத்தி மண் வளம் கெடாமல் பாதுகாக்க வேண்டும். மேலும் உரச்செலவைக்குறைத்து அதிக மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## உழவர் பயிற்சி நிலையம் சார்பில்வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாம்

நாமக்கல்: நாமக்கல் அடுத்த புதுச்சத்திரம் யூனியன், செல்லியாயிபாளையம் கிராமத்தில், உழவர் பயிற்சி நிலையம் சார்பில், வெள்ளாடு வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.

வேளாண் துணை இயக்குனர் நடராஜன் வழிகாட்டுதலின்படி நடந்த முகாமுக்கு, வேளாண் அலுவலர் தனலட்சுமி தலைமை வகித்தார். விவசாயிகள் நல்ல வருமானம் ஈட்டும் வகையில், வெள்ளாடு வளர்ப்பு, ஆட்டுப்பண்ணை பராமரிப்பு, ஆடுகளை எவ்வாறு விற்பனை செய்வது என கால்நடை மருத்துவர் டாக்டர் ராஜேஷ் விளக்கினார்.விதை நேர்த்தியின் அவசியம், உயிர்

பூஞ்சான கொல்லிகளின் பயன்பாட்டு முறைகள் குறித்து, வேளாண் அலுவலர் சித்திரைச்செல்வி பேசினார். மண் ஆய்வின் அவசியம், ஆய்வு செய்யும் முறைகள் பற்றி, மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் பூங்கொடியும், விளை பொருள் குழு அமைத்தல், விளை பொருட்களை தரம் பிரித்தல், மதிப்புக் கூட்டுதல் மற்றும் விற்பனை செய்தல் பற்றிய கருத்துக்களை, வேளாண் வணிகத் துறை உதவி வேளாண் அலுவலர் ஜெயராமனும் எடுத்துரைத்தனர்.வேளாண் பொறியியல் துறை திட்டங்கள் மற்றும் பண்ணை இயந்திரமயமாக்கல் குறித்து, உதவி பொறியாளர் செல்வம், தோட்டக்கலைத்துறை உதவி வேளாண் அலுவலர் செல்வமணி, பட்டு வளர்ச்சித் துறை ளநிலை ஆய்வாளர்கள் சக்திவேல், கட்டிமுத்து ஆகியோர், தத்தமது துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கினர்.அட்மா திட்ட வல்லுனர்கள் ராஜேந்திரன், ஜீவிதா ஆகியோர் விதை நேர்த்தி, நாற்றுகள் நேர்த்தி ஆகியவற்றை செயல் விளக்கம் செய்து காண்பித்தனர். முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## மழையை எதிர்பார்க்கும்கொத்தமல்லி விவசாயிகள்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், மானாவாரி நிலங்கள் பயிர் செய்துள்ள கொத்தமல்லி பயிருக்கு மழையை விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தில், மானாவாரியாக சாகுபடி செய்யப்படும் சீசன் பயிர்களில் கொத்தமல்லி முக்கிய பங்கு வகிக்கிறது. ஆண்டுக்கு, ஒரு முறை மட்டும் தென்கிழக்கு பருவமழையை தொடர்ந்து ஈரப்பதத்தை அதிகம் தாங்க கூடிய களி மண் கொண்ட பகுதிகளில் மாவட்டம் முழுவதும் கொத்தமல்லி சாகுபடி செய்யப்படுகிறது.தற்போது, தர்மபுரி, நல்லம்பள்ளி, பாப்பாரப்பட்டி, பாலக்கோடு, பென்னாகரம் உள்ளபட மாவட்டம் முழுவதும், இரண்டு ஆயிரம் ஏக்கருக்கு மேல் கொத்தமல்லி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கடந்த சில தினங்களாக பனிப்பொழிவு அதிகரித்துள்ளதுடன், வெயிலின் தாக்கமும் குறைந்தளவில் உள்ளது. மாவட்டம் முழுவதும் சாகுபடி செய்யப்பட்டுள்ள கொத்தமல்லிகள் தற்போது நன்கு வளர்ந்து பூத்து குலுங்க துவங்கி உள்ளன.மேலும் செடிகளில் அதிகளவில் மல்லிகளும் காய்த்துள்ளது. ஒரு வாரத்திற்குள் சாகுபடிக்கு தேவையான அளவு மழை பெய்தால் அதிகளவில் மகசூல் கிடைக்கும், எனவே கொத்த மல்லி விவசாயிகள் மழையை ஆர்வத்துடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்

## ஊறுகாய் முதல் புடவை வரை : அனைவரையும் கவரும் வாழைப்பழ கண்காட்சி

சென்னை : தமிழகத்தில் அதிக அளவு வாழைப்பழ உற்பத்தி இருப்பதால், அதன் பயன்பாட்டை விளக்கும் இரண்டு நாள் கண்காட்சி சென்னையில் நேற்று துவங்கியது. இந்த கண்காட்சி

சென்னையில் நடப்பது இது முதல் தடவை ஆகும்.

பல ரகங்கள்

இந்திய தொழிற்கூட்டமைப்பு, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை இணைந்து, சென்னையில் முதல் வாழைப்பழ கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று துவங்கிய, இந்த இரண்டு நாள் கண்காட்சியில் தோட்டக்கலை, வேளாண்துறை, தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம், வேளாண் பல்கலை, தேசிய வாழை ஆராய்ச்சி மையம் ஆகிய அமைப்புகள் பங்கேற்கின்றன. மேலும், வாழை உற்பத்தி தொடர்பான பல்வேறு தனியார் நிறுவனங்களின் அரங்குகளும் உள்ளன.

அவற்றில், தமிழகத்தில் விளையும் பூவன், நெய் பூவன், கற்பூரம், செவ்வாழை, , ரஸ்தாலி, ரொபாஸ்டா, அரிச்சல், கிராண்ட் நைன், மொந்தன், விருப்பாட்சி உள்ளிட்ட பல ரக வாழைப்பழங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

வாழைப்பழத்தில் இருந்து தயாரிக்கப்படும் குழந்தைகளுக்கான சத்துமாவு, சத்து பானங்கள், வாழைத்தண்டு, வாழைப்பூ ஊறுகாய்கள் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

ஊறுகாய்களை சுவைத்து, அவற்றை வாங்கி செல்வதில் பார்வையாளர்கள் பெரிதும் ஆர்வம் காட்டினர். வாழை நாரில் தயாரிக்கப்படும் புடவைகள், கைப்பைகள், வீட்டு அலங்கார பொருட்கள் உள்ளிட்டவையும், பார்வையாளர்

களைக் கவர்கின்றன.

வாழைப்பழத்தை பழுக்க வைக்க பயன்படும் நவீன குளிர்சாதன இயந்திரங்களும், வாழை விவசாயத்திற்கு தேவையான நவீன கருவிகளும் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

தமிழகத்தில் 25 சதவீதம்

கண்காட்சியை ஒட்டி, நவீன முறையில் வாழைப்பழங்களை அறுவடை செய்தல், ஏற்றுமதி செய்தல் தொடர்பான கருத்தரங்கம் நடந்தது. இதில், விவசாயிகள், வேளாண் விஞ்சானிகள், விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

இக்கண்காட்சி குறித்து இந்திய தொழிற்கூட்டமைப்பின் வேளாண்மை மற்றும் உணவு தயாரிப்பு பிரிவு ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன் கூறியதாவது:

இந்தியாவில், தமிழகம், மகாராஷ்டிரா, கர்நாடகா, குஜராத் மாநிலங்களில் தான் வாழைப்பழங்கள் அதிகளவில் விளைகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியில் 25 சதவீத வாழைப்பழ விளைச்சல், தமிழகத்தில் தான் உள்ளது.

வாழைப்பழ உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக திகழ்ந்தாலும், அவற்றை விற்பனை செய்வதிலும், ஏற்றுமதி செய்வதிலும் சில பின்னடைவுகள் உள்ளன.

இதனால், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. வாழைப் பழங்களை கையாள்வது, ஏற்றுமதி செய்வது குறித்து விளக்கவே, இந்த கண்காட்சி முதல் முறையாக இங்கு நடக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இதில், தோட்டக்கலைத்துறை கமிஷனர் சந்தோஷ்பாபு, சி.ஐ.ஐ., நிர்வாகி புருஷோத்துமன் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

22.12.2012 A.M

**வழக்கத்தை விட 35 நாள் முன்னதாக மேட்டூர் அணை மூடல் ; விவசாயிகள் பரிதவிப்பு**



மேட்டூர்: மேட்டூர் அணை மூலம் 11 காவிரி டெல்டா மாவட்டங்களில் 16.05 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஜூன் 12ம் தேதி முதல் ஜனவரி 28ம் தேதி வரை பாசனத்திற்கு ஆண்டு தோறும் நீர் திறப்பது வழக்கம். குறுவை, சம்பா பாசனத்துக்கு ஆண்டுதோறும் 330 டிஎம்சி தண்ணீர் தேவைப்படும். டெல்டா மாவட்டங்களில் பெய்யும் மழையை பொறுத்து நீர் தேவை குறையும். கடந்த ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையில் நீர் இருப்பு குறைவாக இருந்ததால் குறுவை சாகுபடிக்கு நீர் திறக்கப்படவில்லை. செப்டம்பர் 17ம் தேதி சம்பா சாகுபடிக்காக நீர் திறக்கப்பட்டது. அணை தாமதமாக திறக்கப்பட்டதால் குறுவை சாகுபடியை இழந்த விவசாயிகள், சம்பா சாகுபடி பணியில் தீவிரமாக இறங்கினர்.

பருவ மழை காலை வாரியதால் மேட்டூர் அணை நீரை நம்பியே டெல்டா பகுதியில் சாகுபடி பணிகள் நடந்து வருகின்றன. கர்நாடகம் தமிழகத்திற்குரிய காவிரி நீரை தர மறுத்ததால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் சரியத் தொடங்கியது. 32 அடியாக சரிந்ததையடுத்து குடிநீர் தேவையை கருத்திலும் கொண்டும், அணையில் மீன்வளத்தை காக்கவும் நீர் திறப்பு நேற்று இரவு 8 மணியுடன் நிறுத்தப்பட்டது.

டெல்டா பாசனத்திற்கு வழக்கமாக ஜனவரி 28ம் தேதி வரை நீர் திறக்கப்படும். இந்த ஆண்டு தாமதமாக நீர் திறக்கப்பட்டதால் பிப்ரவரி மாதம் இறுதி வரை நீர் தேவைப்படும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். ஆனால் வழக்கத்தை விட 35 நாட்களுக்கு முன்னதாகவே நீர் திறப்பு நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது அறுவடைக்கு நெற்பயிர் தயாராகி வரும் நிலையில் நீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளதால் கருகும் பயிரை காப்பாற்ற வழியின்றி விவசாயிகள் கவலை

அடைந்துள்ளனர். மின்சார தட்டுப்பாடும் நிலவுவதால், மின்மோட்டார்கள் மூலம் நீர்பாய்ச்சி பயிரை காப்பாற்ற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**யானைகள் அட்டகாசம்**



அணைக்கட்டு: வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் அடுத்த கத்தாரிகுப்பம் கிராமத்தினுள் நேற்று முன்தினம் இரவு 5க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் திடீர் என புகுந்தது. அப்போது அங்கு பயிரிடப்பட்டிருந்த ஒரு ஏக்கர் பயிர்களை சேதப்படுத்தின.இதனை தொடர்ந்து அங்குள்ள குடியிருப்பு பகுதியில் நுழைந்த யானைகள் அங்குள்ள 5 வீடுகளை உடைத்து, உள்ளே இருந்த பொருட்களை வீசின. இதனால், மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்துக்கு சென்றனர். தகவலறிந்த ஒடுகத்தூர் வன அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து அங்கே முகாமிட்டு யானைகளை துரத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

**விருதுநகரை வறட்சியால் பாதித்த மாவட்டமாக அறிவிக்க வேண்டும்**



சிவகாசி: விருதுநகர் மாவட்டத்தை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என மார்க¢சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ராமகிருஷ¢ணன் தெரிவித்தார். விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகேயுள்ள புதுக¢கோட்டையில் பயிர்கள் கருகியதால்

விவசாயி பாண்டி என்பவர் தற்கொலை செய்துகொண் டார். இவரது குடும்பத்தினரை மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ராமகிருஷ்ணன் நேற்று சந்தித்து ஆறுதல் கூறினார். பின்பு அவர் நிருபர்களிடம் கூறியதாவது: விவசாயி பாண்டி தலா 2 ஏக௪கரில் மக௪காச்சோளம், நெல் சாகுபடி செய்துள் ளார். கடன்பெற்று விவசா யம் செய௪திருந்த நிலையில், பயிர்கள் கருகி நஷ௪டமடைந்ததால் மனமுடைந்து தற்கொலை செய்துள்ளார். தமிழக அரசு இவரது குடும்பத்தினருக௪கு யி10 லட்சம் நிவாரணம் வழங்குவதோடு, குடும்பத்தில் ஒருவருக௪கு அரசு வேலையும் வழங்க வேண்டும். மழை இல்லாததால் இப்பகுதியில் சுமார் 200 ஏக்கரில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். மழையின்றி விவசாய பணிகளில் பாதிப்பு ஏற்படு௪ம்போது, மாற்றுத்தொழ¤ல் ஏற்பாடு செய்து விவசாயிகளின் வாழ௪வாதாரத்தை பாதுகாக்க அரசு நடவடிக௪கை எடுக௪க வேண்டும். விருதுநகர் பகுதிகளில் கடும் வறட்சி நிலவுகிறது. எனவே விருதுநகர் மாவட்டத௪தை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக௪க வேண்டும்.குஜராத்தில் இயல்பான முறையில் தோ௪தல் நடைபெறவில்லை. இந்துத்துவா வகுப்புவாத சக௪திகளுக௪கு தற்காலிகமாக வெற்ற¤ கிடைத்துள்ளது. இரு மாநில தேர்தல் முடிவுகள் நாடாளுமன்ற தேர்தலில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றார். பேட்டியின்போது மாநிலக்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன், மாவட்ட செயலாளர் சேகர், விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் விஜயமுருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### மானிய விலையில் விற்க 840 டன் ஜிப்சம் உரம்

கடலூர், : கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் சுமார் 840 டன் ஜிப்சம் மானிய விலையில் விற்பனைக்கு உள்ளது. கார்த்திகை பட்டத்தில் மணிலா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மேற்படி வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு மானிய விலையில் ஜிப்சத்தை பெற்று பயன் பெறலாம். ஜிப்சத்தில் உள்ள சுண்ணாம்பு சத்து மணிலாவில் எண்ணெய் சதவீதத்தை அதிகரிக்க செய்யும் மற்றும் மணிலா காய்கள் திரட்சி பெற்று அதிக எடை கூடும். சந்தையில் அதிக விலை பெற்று விவசாயிகளுக்கு லாபம் கிடைக்க ஏதுவாகும். எனவே அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு

பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

## தஞ்சையில் விவசாய கடன் வழங்கும் விழா

தஞ்சை,: தஞ்சையில் விஜயா வங்கியின் விவசாய கடன் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. முகாமை கோவை மண்டல உதவி பொதுமேலாளர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். தஞ்சை கிளை மேலாளர் கோபாலகிருஷ்ணன் வரவேற்றார். புதிய விஜயா கிசான் கார்டு திட்டத்தின் நன்மைகள் குறித்தும், விவசாயிகளுக்கு கடன் அட்டை கள் வழங்கியும் தலைமை அலுவலக உதவி பொது மேலாளர் வாசுதேவன் பேசினார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் ரவி சிறப்புரையாற்றினார். முகாமில் 140 விவசாயிகளுக்கு ரூ.3 கோடிக்கான கடன் அனுமதி வழங்கப்பட்டது. தஞ்சை, திருச்சி, திருவாரூர், கும்பகோணம், மயிலாடுதுறை கிளைகளை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். தஞ்சை கிளை அலுவலர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## மதுரையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க விவசாயிகள் வலியுறுத்தல் பயிர் கடன் ரத்தாகுமா ?

மதுரை, : மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் அன்சுல் மிஸ்ரா தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவ லர் ரவீந்திரன், வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன், மாவட்ட வன அலுவலர் சம்பத், தனித்துறை ஆட்சியர் ஆறுமுக நயினார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ஜெய்சிங் ஞானதுறை உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நடந்த விவாதத்தில் விவசாயிகள் பேசியதாவது:

விவசாயி பாண்டியன்: இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால், ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி இல்லாமல் போய்விட் டது. கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் வாங்கியுள்ள கடனை தள்ளுபடி செய்யவேண்டும். மதுரையை வறட்சி மாவட்டமாக அறிவிக்கவேண்டும்.

விவசாயி செல்லக்கண்ணு: மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் முறைகேடுகள் அதிகளவில் நடக்கிறது. உரக்கடைகளை தீவிரமாக கண்காணிக்கவேண்டும்.

விவசாயி தேவராஜ்: மழை இல்லாததால், நெல் விவசாயம் இந்த ஆண்டு நடைபெறவில்லை. ஆகவே, நெல் நடவு செய்து, தண்ணீரின்றி பயிர்கள் கருகி விட் டது. இந்த விவசாயிகளுக்கு

ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம், தரிசுக்கு ரூ.16 ஆயிரம், கரும்பு உள்ளிட்ட தோட்டப் பயிர்களுக்கு ரூ.40 ஆயிரம் இழப்பீடு வழங்கவேண்டும். விவசாயிகளுக்கான பயிர் காப்பீட்டு இன்சூரன்ஸ் தேதியை டிசம் பர் 31ம் தேதி வரை நீட்டிக்கவேண்டும்.

முத்து பேயாண்டி: மதுரையில் உள்ள பூ மார்க்கெட்டில் விவசாயிகளில் பூ கொள்முதல் செய்வதில், கம்ப்யூட்டர் தராசு இல்லாததால், முறைகேடு நடக்க வாய்ப்பு ஏற்படுகிறது. கம்ப்யூட்டர் தராசு வைக்கவேண்டும்.

பால்சாமி: மழை, தண் ணீர், மின்சாரம் இல்லாமல் மதுரை மாவட்ட விவசாயி கள் வறுமையில் வாடுகி றோம். பிழைப்பதற்கு வழியின்றி தவிக்கிறோம். கூட்டுறவு வங்கி கடனை முழுமையாக ரத்து செய்து நிவாரணம் வழங்கவேண்டும்.

பழனிச்சாமி: மதுரை சர்க் கரை ஆலையில் 2 ஆயிரத்து 500 டன் அரவைத்திறன் உள்ளது. ஆனால், ஆயிரத்து 500 டன் அரவைப்பணி மட்டுமே நடக்கிறது. தினசரி நான்கு முறை பழுது ஏற்படுகிறது. இதனால், நூற்றுக்கும் மேற்பட்ட கரும்பு லாரிகள் காத்திருப்பதால், கரும்பு வெயிலில் காய்ந்து விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. கரும்பு கொள்முதல் விலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.

கலெக்டர் பேசுகையில்: கிரானைட் குவாரி தொடர்பாக நேர்மையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் எவ்வித அச்சமும் தேவையில்லை. மாவட்டத்தின் விவசாய நிலவரம் குறித்து அரசுக்கு முறையாக அறிக்கை அனுப்பப்படும். மாவட்டத்தில் அரசு நிலம் ஆக்கிரமிப்பு எங்கிருந்தாலும் உடனே அதிகாரிகள் அகற்ற வேண்டும். அவர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்,என்றார்.

### மிளகாய் பயிர் காப்பீடு செய்ய ஜனவரி 15 கடைசி கலெக்டர் தகவல்

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் பயிருக்கு அடுத்தபடியாக மிளகாய் பயிர் செய்யப்படுகிறது. அக்டோபர், நவம்பர் மாதத்தில் விதைப்பு செய்து மே மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. நடப் பாண்டில் 2012-2013ல் மிள காய் பயிரிடும் விவசாயிகள், வெள்ளம், மழை, புயல், கடுமை யான வறட்சி, பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் ஏற்படும் பாதிப்புக்கு இழப் பீடு வழங்க, தேசிய வேளாண் மைக் காப்பீட்டு நிறுவனம் பயிர் இன்சூரன்ஸ் திட் டத்தை செயல்படுத்துகிறது.

மாவட்டத்தில் திருவா டனை மற்றும் மண்டபம் வட்டாரங்கள் தவிர மற்ற 9 வட்டாரங்களில் இது செயல்படுத்தப்படுகிறது. பயிர் கடன் பெற்ற விவசாயிகளின் பிரீமியம் தொகை கடன் வழங்கும்

நிறுவனத் தின் மூலம் பிடித்தம் செய்யப்படும். பயிர் கடன் பெறா விவசாயிகள் தங்கள் சுயவிருப்பத்தில் பயிர்காப்பீடு செய்யலாம். ஒரு ஏக்கர் மிளகாய் பயிருக்கு ரூ.5076 காப்பீடு செய்யப்படும். பிரீமியம் தொகை காப்பீட்டு தொகையில் 10 சதவீதம் அதாவது ரூ.508 ஆகும். வணிக வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர் கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் பிரீமியம் தொகையில் 50 சதவீதமும், பயிர்கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பிரீமியம் தொகையில் 55 சதவீதமும், பயிர்கடன் பெறாத பெரிய விவசாயிகளுக்கு பிரீமியம் 50 சதவீதமும், மானியமாக மத்திய, மாநில அரசால் வழங்கப்படுகிறது.

பயிர்கடன் பெற்ற விவசாயிகள் ஒரு ஏக்கர் மிளகாய் பயிருக்கு ரூ.254ம், பயிர்கடன் பெறாத சிறு மற்றும்  விவசாயிகள் ரூ.228ம் பிரீமி யம் செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். பயிர் கடன் பெறாத பெரிய விவசாயிகள் ரூ.254 பிரீமியம் செலுத்த வேண்டும். விவசாயிகள் பிரீமியம் தொகையை தேசிய மயமாக்கப்பட்ட வணிக வங்கி கள், கிராமிய வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட் டுறவு வங்கியில் செலுத்தலாம்.

கடன் பெறா விவசாயிகளுக்கு 2013 ஜனவரி 15ம் , கடன் பெற்ற விவசாயிகளுக்கு 2013 மார்ச் 31ம்  இத்திட்டத் தில் சேர்வதற்கு கடைசிநாள்.  விபரங்களை வட்டாரத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையம், வட்டார தோட்டக் கலை அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி அறிந்து கொள்ளலாம் என கலெக்டர் தெரிவித்தார்.

## கோழிகளில் தீவன எடுப்பை கட்டுப்படுத்த பண்ணைகளில் 3 அடி உயரத்துக்கு பக்கவாட்டு படுதா அவசியம்

நாமக்கல், : நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வரும் 4 நாட்களுக்கான வானிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது:

நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் வரும் 4 நாட்களும் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 3 கி.மீ. வேகத்தில் கிழக்கில் இருந்து வீசும். வெப்பநிலை அதிகபட்சம் 86 டிகிரி. குறைந்தபட்சம் 68 டிகிரி. காற்றின் ஈரப்பதம் அதிக அளவு 82 சதவீதம். குறைந்த அளவு 42 சதவீதமாக காணப்படும்.

குளிர்காலத்தின் உச்சத்தை தொடும் இத் தருணத்தில் கோழிகளில் தீவன எடுப்பு உயரும் என்பதால், தீவன எடுப்பை கட்டுப்படுத்தும் முயற்சியாக அடுத்த இரு வாரம் உயர்மனைகளின் இருபுறமும் பக்கவாட்டில் 3 அடி உயரத்துக்கு படுதாவை கட்டவேண்டும். தீவனத்தில் கூடுதலாக

வைட்டமின் டி3 சேர்க்கவேண்டும்.

கடந்த வாரம் கோழியின நோய் ஆய்வகத்தில் ஆய்வு செய்த இறந்த கோழிகள் பெரும்பாலும், இறக்கை அழுகல் நோய் மற்றும் மேல்மூச்சுக்குழாய் நோயால் இறந்திருப்பது தெரியவந்துள்ளது. ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட தீவன மூலப்பொருட்களில் ஈகோலை கிருமியின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது தெரியவந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் முறையான உயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டு வளர்ச்சி துறை அலுவலர் ஆர்ப்பாட்டம்

கோவை, : தமிழ்நாடு பட்டு வளர்ச்சி துறை அலுவலர் சங்க கோவை மாவட்ட கிளை சார்பில் பாலசுந்தரம் ரோட்டில் உள்ள உதவி இயக்குனர் அலுவலகம் முன்பு நேற்று மாலை ஆர்ப்பாட்டம் நடந்தது. ஏழு அம்ச கோரிக்கையை வலியுறுத்தி இப்போராட்டம் நடந்தது. சங்க தலைவர் சவுந்தரராஜன் தலைமை தாங்கினார். செயலாளர் சுகுமாரன் கோரிக்கை விளக்க உரையாற்றினார். பல்வேறு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் தேவராஜன், மதன், சிவஜோதி, சந்திரன், வெங்கடேஷ், அருணகிரி, செல்வராஜன் உள்பட பலரும் பேசினர்.

## 28ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருச்சி,: திருச்சியில் வரும் 28ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 28ம் தேதி காலை 10.30 மணிக்கு நடக்கிறது. கலெக் டர் ஜெயஸ்ரீ தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கங்க ளின் பிரதிநிதிகள் பங் கேற்று விவசாய பிரச்னை கள், வேளாண்மை தொடர் பான கடனுதவி பிரச்னை கள் மற்றும் குறை களை நேரிலோ, மனுக்கள் மூலமோ தெரிவிக்கலாம் என கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாடிய சம்பா பயிரை காப்பாற்ற நுண்ணுயிர் கலவை இலவசம் விவசாயிகள் அழைப்பு

நீடாமங்கலம்,: நீடாமங்கலம் வேளாண்மை அறி வியல் நிலையத்தில் வாடிய சம்பா பயிரை காப் பாற்ற பிபிஎப்எம் நுண்ணுயிர் கலவையை பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண் மை அறிவியல் நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

நீரின்றி வாடும் சம்பா நெற்பயிர்களை காப் பாற்ற தமிழக முதல்வரின் கூடுதல் சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்புத்திட்டம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழக துணைவேந்தர் அறிவுரைபடி மாவட்டத்தில் பல இடங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தின் பிபிஎப்எம் என்ற நுண்ணுயிர் கலவையை தெளிப்பதனால் பயிர்களின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுவதோடு 10-15 நாட்களுக்கு வறட்சியை தாங்கும் தன்மையையும் கொடுக்கும். இத்தகைய நுண்ணுயிர் கலவையை ஏக்கருக்கு 200 மி.லிட்டர் வீதம் பல்வகை தெளிப்பான் கொண்டு திருத்துறைபூண்டி வட்டம் கொற்கை, கச்சனம், பாமணி மற்றும் திருவலஞ்சுழி கிராமங்களில் கடந்த வாரம் நீடாமங்கலம் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் விவசாயிகள் அஞ்சலிதேவி, அசோகன் ஆகியோர் வயல்களில் தெளித்து பார்த்ததில் 4-5 நாட்களில் பச்சையம் திரும்பியதை கண்டுணர முடிந்தது.
எனவே விவசாயிகள் உடன் நீடாமங்கலம் வேளா ண்மை அறிவியல் நிலை யத்தை அணுகி நுண்ணுயிர் கலவையை பெற்று கொள்ள லாம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அதிக ?மகசூலுக்கு ?விதை ?பரிசோதனை ?அவசியம் வேளாண் அலுவலர் விளக்கம்**

திண்டுக்கல்,: கூடுதல் மகசூல் பெற விதைகளின் தரத்தை அறிந்து பயிர் செய்வது சிறந்தது. எனவே விவசாயிகள் விதை பரிசோதனை நிலையத்தை அணுகி பயன் பெறுமாறு வேளாண் அலுவலர் தேன்மொழி தெரிவித்துள்ளார்.
இதுகுறித்த அவரது அறிக்கை:
விவசாயத்திற்கு வித்தாகும் விதையை அதன் தரம் அறிந்து வாங்குவது அவசியம். ஏனென்றால் கூடுதல் மகசூலுக்கு விதைகளின் பல்வேறு குணாதிசியங்கள் காரணமாகின்றன.
பிற ரககலப்பு, புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புதிறன் உள்ளிட்டவை இதில் அடங்கும். எனவே விதைப் பரிசோதனை நிலையத்தில் இவற்றைப் பகுப்பாய்வு செய்து விதைகளை நடவு செய்வது சிறந்த பலன் தரும். இதற்காக ரூ.30 செலுத்தி விதைகளின் தரத்தை தெரிந்து கொள்ளலாம்.
பிறரக கலப்பானது சமர்ப்பிப்பு விதை மாதிரி முழுமைக்கும் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. சமர்ப்பிப்பு விதை மாதிரியின் அளவானது பயிருக்கு பயிர் வேறுபடும். விதைக்ப்படும் முன் விதையின் ஈரப்பதம் அளவாக உள்ளதா என அறிவது அவசியம். ஏனென்றால் ஈரப்பத அளவு சரியாக இல்லையென்றால் சேமிக்கும் விதையோ, விதைக்கும் விதையோ நல்ல பலன்தராது. ஆகவே ஈரப்பதம் சரியான அளவில் இருப்பதை அறிந்து கொள்வது அவசியம்.

விதையின் புறத்தூய்மை அதன் நிர்ணயிக்கப்பட்ட அளவில் இருந்தால் மட்டுமே மகசூல் இருக்கும். அதேபோல் விதையின் முளைப்புத்திறனும் வயலில் விதைப்பதற்கு முன் தெரிந்து கொண்டால் விதைப்பு வீணாவதைத் தடுக்கலாம்.எனவே விதையின் தரத்தை அறிந்திட திண்டுக்கல் விதை பரிசோதனை நிலையத்தை அணுகலாம். மேலும் விபரங்களுக்கு 94427 50217 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பயிர்களுக்கு நிவாரணம் கோரி கோவில்பட்டியில் டிச.28ல் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

கோவில்பட்டி, : தண்ணீரின்றி கருகிய பயிர்களுக்கு நிவாரணம் வழங்க கோரி கோவில்பட்டியில் வரும் 28ம் தேதி விவசாயிகள் சார் பில் ஆர்ப்பாட்டம் நடக்கிறது.

கோவில்பட்டியில் தமிழக விவசாய சங்க தலை வர் நாராயணசாமி நாயுடு வின் நினைவஞ்சலி கூட்டம் நடந்தது. விவசாயிகள் சங்க மாநில தலைவர் சிவசாமி தலைமை வகித்து, நாராயண சாமி படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாநில பொதுசெயலாளர் ராமகவுண்டர் முன்னிலை வகித் தார். பொன்ராமசுப்பு, மாரிச்சாமி, சௌந்தரராஜன், கோபால்சாமி, ரங்குதாஸ், பேராசிரியர் குரு ஜெகன்னாதன், சீனிவாசன், ராஜகோபால், பாண்டியன், சக்திவேல், சேதுராஜ், ஆதி மூலம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தூத்துக்குடி, நெல்லை, விருதுநகர் மாவட்டங்களில் இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் தண்ணீரின்றி மானாவாரி பயிர்கள் கருகிவிட்டன. இத னால் 3 மாவட்டங் களையும் வறட்சி மாவட்டமாக அறிவித்து ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வழங்க வேண் டும். விவசாய கடன்களை ரத்து செய்ய வேண்டும்.

விருதுநகர் மாவட்டத் தில் வறட்சியால் தற்கொலை செய்த விவசாயி குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கோரி வரும் 28ம் தேதி கோவில்பட்டி தாலுகா அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.